ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்று — ஆண்டாள்

தொகுதி ௩௧	கர ௵ ஆனி ௴	பகுதி ௩

ஸ்ரீமத் சுவாமி விரஜாநந்தஜியின் மஹாசமாதி

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சங்கம் இரண்டிற்கும் தலைவராய் விளங்கிய ஸ்ரீமத் சுவாமி விரஜாநந்தஜி மஹராஜ் பேலூர்த் திருமடத்தில் சென்ற மே மாதம் 30-ம் தேதியன்று காலை 6-56 மணிக்கு உலகவாழ்வை நீத்துத் தமது ஆசாரியரின் திருவடிகளை நண்ணினர் எனும் செய்தியை ஆழ்ந்த துயரத்தோடு அறிவிக்கிறோம். அவரோடு சுவாமி விவேகாநந்தரின் துறவிச் சீடர்களது திருக்கூட்டம் மறைந்தமை ஸ்ரீ ராமகிருஷ்ணரது மரபிற்கு ஈடுசெய்ய வொண்ணாத பெரு நஷ்டமாயிற்று.

சுவாமிகளின் பழைய பெயர் காளிகிருஷ்ணர்; அவர் 1873-ம் ஆண்டு ஜூன் 10-ம் தேதி பௌர்ணமியன்று கல்கத்தாவில் டாக்டர் திரை லோக்யநாத் சென் என்பவருக்குக் குமாரராகப் பிறந்தார். கல்லூரியிற் கல்விபயிலும்போது தமது 18-வது வயதிலே குடும்ப வாழ்வைத் துறந்து ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தார். ஸ்ரீசாரதா தேவியாரிடம் தீக்ஷையையும், பின் சுவாமி விவேகாநந்தரிடம் துறவையும் பெற்றார். மாயாவதி ஆசிரமத்திலே 'பிரபுத்த பாரதா'விற்குப் பத்திராசிரியராய்ப் பல ஆண்டுகள் உழைத்தார். சுவாமி விவேகாநந்தரது சரிதத்தையும், அவர் இயற்றிய நூல்கள் முழுமையையும் ஆராய்ந்து பதிப்பித்தார். 1915-ல் இமயமலையில் தனியிடத்திற் புதிய ஆசிரமம் ஒன்று அமைத்து, அதில் 11 ஆண்டுகள் கடுந்தவம் புரிந்தார். 1934ல் ஸ்ரீ ராமகிருஷ்ண மட — சங்கக் காரியதரிசியானார்; 1938ல் தலைவரானார். பல்லாயிரக் கணக்கான சீடர்கள் அவர்பால் உபதேசமும் தீக்ஷையும் பெற்றுள்ளனர். அவரது ஆன்மா சாந்தியடைவதாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உயர்ந்தோர் கூறும் உறுதி மொழிகள்

அவாவறுத்தல்

(115-ம் பக்கத் தொடர்ச்சி)

எல்லா வாசனைகளையும் விடுபவனும், பற்றற்றவனும், பின்னர் சின்மய வடிவமாயுள்ள என்னிடம் தன்னை நிலை நாட்டுவோனும் சச்சிதானந்த மயமான நானே யாவான்.

மேன்மையுற்ற நெஞ்சமும் ஆசையற்ற உள்ளமும் உடையவன் உண்மையாகவே விடுபட்டவனே; அவன் சமாதியில் இருந்தாலும் இராவிடினும் சரி, நித்தியம் முதலான கருமங்களை இயற்றினும் இயற்ருவிடினும் சரி.

ஜீவன் முத்தர்களில் பிரம்மவித் முதலானோர் (வரன், வரியான், வரிஷ்டன் என்பவர்) நான்கு படிகளைச் சார்ந்தவர். இவர்கள் அனைவரும் விடுபட்டவராயினும், காணக்கூடிய துக்கங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அளவு வேறுபட்ட துக்கங்களை அனுபவிப்பார்கள்.

ஆதலால், சாமர்த்தியமும் ஞானமும் உடையவன் முறைப்படியே நிர்விகல்ப முதலான சமாதிகளையும் நித்திய கருமங்களையும் பழகி வரல் வேண்டும். (நிர்விகல்பம் நிஸ்ஸங்கல்பம் நிர்விருத்திகம் நிர்வாசனு எனும் நான்கு சமாதிகளும் முற்கூறிய நான்கு வகைப்பட்ட ஜீவன் முக்தர்கட்கு முறையே உரியனவாம்.)

வாசனைகளற்ற உள்ளமுடையவனுக்கு நைஷ்கர்மியத்தாலே யாதொரு பலனும் உண்டாவதில்லை; கருமங்களாலோ, ஆழ்ந்த தியானத்தாலோ பிரார்த்தனையாலோ அவனுக்குப் பயனில்லை. (நைஷ்கர்மியம் என்பது கருமங்களை இயற்றுவதால் விளையும் நிலையினுக்கு மாறுனதும் ஞானத்தால் விளைவதுமான முக்தியாம்.)

பிரம்மத்தை யுணர்ந்தவன் (முற்கூறிய) மங்களகரமான நைஷ்கர்மியம் முதலியவற்றை இடைவிடாது பழகவேண்டும்; அவ்வாறு செய்தல் அவனுடைய வெளிப்படையான துக்கங்களை வெல்வதற்கோ, உலக நன்மைக்கோ ஆகும்.

வாசனைகளை முழுதும் ஒழியாமலும், மௌன நிலை எய்தாமலும் பரமமான நிலையினை அடைய முடியாது; (இந்நோக்கத்தோடு) அசுத்த வாசனைகளைத் தள்ளிவிடுக, சுத்த வாசனைகளை வைத்துக் கொள்க.

கண் முதலிய இந்திரியங்கட்குரிய சக்திகளால், இந்திரியங்கள் தம்மைத் தூண்டும் வாசனை இல்லாதபோதும் தாமாகவே புறத்தேயுள்ள பொருள்களை நோக்கிச் செல்கின்றன; ஆதலால் வாசனையே காரணமன்று என்பது தோன்றுகிறது.

சாதாரண நிலையிலே இயல்பாகவே கண் இடவெளியையும் அதனிடத்துள்ள பொருளையும் காணுவது போலவும், அவற்றில் யாதொரு பற்றும் கொள்ளாதது போலவும் உறுதியான புத்தியையுடைய ஞானியும் கருமங்களில் ஈடுபடல் வேண்டும்.

ஓ மாருதி! ஞானிகள் வாசனையின் இயல்பை அறிவார்; உள்ளிருக்கும் வாசனையே புத்தியின் உண்மையான நிலையை வெளிப்படச் செய்கிறது, அந்த புத்திக்கு ஏற்ப நடப்பது, மனத்திற்கு முக்கிய மூலமாவது.

பலமான அனுபவத்தைத் தரும் பொருள்களைப்பற்றி அடிக்கடி சிந்திப்பதனுல், பிறப்பு, முதுமை, மரணம் என்பதற்குக் காரணமான மிகப் பெருஞ் சலனமுள்ள மனம் உண்டாகின்றது.

வாசனையால் பிராணன் அசையத் தொடங்குகிறது; ஆனுல் வாசனை அசைவதில்லை. இந்த அசைவு மனதிற்கு மூளையான பொருளுக்கு (அகங்கார உணர்ச்சிக்கு)ச் செல்லவே, அதை முளைக்கச் செய்கிறது (புற நிகழ்ச்சியாக ஆக்குகிறது).

சித்தம் எனும் மரத்திற்கு இரு விதைகள் உள்ளன; ஒன்று பிராணனின் அசைவு, மற்ருென்று வாசனை. இவற்றில் ஒன்று பலவீனமாகுமாயின், அவையிரண்டும் விரைவில் நாசமடையும்.

வாசனையைத் தொழிற்பட வொட்டாது செய்தற்கு, சாதாரண வாழ்வில் உள்ள கடமைகளைப் பற்றின்றி இயற்றல் வேண்டும்: உலகப் பொருள்களைப் பற்றிய கற்பனைகளையெல்லாம் மனதைவிட்டு வெளியேற்ற வேண்டும்; உடலின் அழியும் இயல்பை மறவாதிருக்க வேண்டும்.

வாசனையைக் கைவிட்டதும் சித்தம் அசித்தமாகிறது (சித்தமற்ற தன்மையை அடைகிறது); அப்போது வாசனைகள் எப்போதும் இல்லையாதலின் நினைத்தற்கு முடியாத நிலை வந்தெய்துகிறது.

அப்போது மிக்க அமைதியைத் தரும் மனமற்ற நிலை விளைகிறது; உடனே முக்தியை

அளிக்கக்கூடிய விஞ்ஞானம் (பரந்த ஞானப்) வளரத் தொடங்குகிறது.

மனமற்ற நிலையில் நின்று பரமபதத்தினை நேரே காணும் திறமை பெறும் வரை, ஞான குருவும் சாஸ்திரங்களும சொல்லுகிறபடியே நடக்கவேண்டும்.

முதிர்ந்த நிர்குண தியானத்தால் மெய்ப் பொருளை முழுதும் உணர்ந்த பிறகு தூய வாசனைகளின் கூட்டத்தையும் இயல்பாகவே நீ தள்ளிவிடக் கூடியவனுவாய்.

மன நாசம் இருவகையுண்டு; ஒன்று சொரூப நாசம், மற்றொன்று அரூப நாசம். ஜீவன் முக்தன் விஷயத்தில் சொரூப மனமும், விதேக முக்தனிடம் அரூப மனமும் அழியும்.

பவன குமார! சித்த நாசம் என்பதன் இயல்பை மறுமுறையும் கவனித்துக் கேளு. ஜீவன்முக்தனது மனத்திலே நட்பு முதலிய குணங்கள் இருப்பதனுலும், மறுபிறப்புக் குரிய வித்து இல்லாமையாலும், அமைதியை அடைகிறது.

சம்ஸாரம் எனும் மரத்திற்கு மனமே வேர் ஆகும்; அப்புறம் நாலா பக்கங்களிலும் குருத்துக்களையும் மலர்களையும் கனிகளையும் தாங்கிய ஆயிரக் கணக்கான கிளைகளை எல்லாப் பக்கங்களிலும் பரப்பிக் கொண்டுள்ளது.

மனம் என்பது சங்கற்பமே என்பதை நான் நம்புகிறேன்; சங்கற்ப நாசத்தால் மனத்தை வற்றவைத்து, சம்சார மரமே அதனுல் வறண்டு போகும்படிச் செய்யலாம்.

சங்கற்பங்களை வற்றச் செய்யும் நிஸ்ஸங்கற்ப சமாதியென்னும் ஒரே வழியால் தான் மனம் தானகவே கரையக்கூடும்.

மனத்தின் சுறுசுறுப்பு துக்கமாம், அதன் நாசம் ஆனந்தமாம். ஞானியின் மனம் விரைவில் நாசமாகின்றது; ஆனுல் அறியாமையுள்ளவர்க்கு அது விலங்கைப் போன்றது.

வாசனைகளற்ற சித்தமே பரம ஞானிகளின் மெய்ஞ்ஞானம். வாசனைகள் நிறைந்த சித்தமோ கட்டத்தற்கு எளிதாம், பயனற்றதாம்.

— ராம கீதை

குருதேவர் உபதேச மணிமாலை

(83-ம் பக்கத் தொடர்ச்சி)

849-ஜீவபாவனையும் சம்பந்தமும்

இந்தியப் பயனை நுகர்ந்திடுஞ் சீவ
இயல்பில்நீ யிருந்திடு மளவும்
வந்தநின் விமுத்தி தொடர்பினைக் குறிக்கும்,
வகுத்திடு சித்தமு மிங்கே
சந்திகொ ளிலீலை குறித்திடும், நீசொல்
சடங்குணத் தொடர்புடைத் தாகும்
முந்தகப் பிரம்மம் புலப்படு தெய்வம்,
முன்னிடு பொருமையும் பன்மை. 167

[இந்தியப்—இந்திரியம். சந்தி கொள் இலீலை எனப் பிரிக்க. அகப் பிரம்மம்—உள் இருக்கும் பிரம்மம்.]

850-ஜீவனுள்ளவரை உலகும் கடவுளும்

பகர்ந்திடும் சீவ பாவனை தன்னிற்
பயின்றிடும் காறுமோர் வெண்ணெய்
உகந்திடு மிரண்டுந் தழுவிடல் வேண்டும்,
உலகிறை யிரண்டுமாங் கொள்கை;
அகந்தரு பாலே சமாதியி லறிய
லாம்பரப் பிரம்மமாம் வெண்ணெய்
இகந்தரு மீசன், மோரறு நான்காய்
இசைந்திடுந் தத்துவ வுலகம். 168

[பயின்றிடும் காறும்—பயிலும் வரை. அறு நான்கு—இருபத்து நான்கு.]

851-ஈசுவர தரிசனத்தின் மெய்ம்மை

"என்னுடைக் கொள்கை மட்டுமே நேராம்,
ஏற்றமதா ருத்திக்கு மொத்த
துன்உரு வுடைய கடவுளு முண்டென்
றுள்ளுதல் பெரும்பிழை' யென்று
துன்னுமத் துவைதி சொல்லிடா திருக்க;
தூயவன் தோற்றங்க ளெல்லாம்
மன்னுமிம் மெய்யின் மெய்ம்மையாம்,
உலகம்
மனஞ்சடங் களின்மிக மெய்ம்மை. 169

[உத்திக்கும்—யுக்திக்கும். தூயவன் — ஈசன். மெய்யின்—உடலைக் காட்டிலும்.]

852-பேச்சளவான அத்வைதம்

அத்துவைத தந்தான் அறைந்திடும் பொழுதில்
அத்துவைத தத்தையு முறுப்பாய்,
சத்திய பார மார்த்திகங் கூறில்
சார்வியாவகாரிகமுங் கொள்ளாய்,
வித்தக சமாதி மேவிடுங் காறும்
விளம்புமத் துவைதமும் வாய்ச்சொல்
சுத்தவத் துவைதஞ் சொல்லிடத் தகாது,
சொல்லிடில் புதுமகங் காரம். 170

[அறைந்திடும்—சொல்லும். உறுப்பாய்—(ஸ்தாபிப்பாய்) அழுத்துவாய். வித்தகம்—பெருமை.]

856-பிரம்மமும் சக்தியும் ஒன்றாம்

இயங்கிடாப் பரமு மியங்குசத் தியமிங்
  கியல்பினி லொன்றென வுணர்க,
தயங்கிடுஞ் சச்சி தாநந்த பரனே
  சத்தியு ஞானமு முற்றும்
வயங்குபா நந்த வடிவபா ரன்னை
  வடிவனாம், பணியுநல் லொளியும்
முயங்குள வொன்றாப், இரண்டையும் வேறாய்
  முன்னிட வியலுவ தன்றே. 171

[இயங்குதல் — அசைதல். வடிவனாம் — வடிவமுடையவனாகிறான். முன்னிட — நினைக்க.]

864-சகுணப் பிரும்மத்தின் அவசியம்

நிகழ்த்திடுஞ் சமாதி நிலைமையிற் றானே
  நிர்க்குணப் பரமுணர்ந் தவரும்
மகத்துவன் றன்னை மதியுறற் கேற்ப
  மனத்தகங் காரமுற் றிடுவர்;
அகசதுறச் சகுணப பிரம்பமும் வேண்டும்
  ஆரிசைச் சரளியில் நிசாத
மிகப் படுகுரலே யிடையறப் பற்றி
  விடாதிசை பாடுத லரிதே. 172

[மகத்தவன் — ஈசன். இசைச் சரளி — சங்கீதத்தில் வரும் சரளி வரிசை. மிகப்படு — உயர்ந்த. நிசாத — 'நி' என்ற ஸ்வரம், நிஷாதம்.]

சுவாமி துரியாநந்தரின் உபதேசங்கள்

[ஸ்ரீராமகிருஷ்ணரின் சிஷ்யரான ஸ்ரீமத் சுவாமி துரியாநந்தரைப்பற்றி சுவாமி விவேகாநந்தர் கூறியதாவது: "என்னிடம் க்ஷத்திரிய வீரியம் உள்ளது, அவரிடம் பிரம்ம தேஜஸ் உள்ளது: நான் வேதாந்தம் போதித்தேன்; அவர் அப்படியே வாழ்ந்து காட்டுவார்." இவர் எழுதிய கடிதங்களிலிருந்து பின்வருவது பொறுக்கப்பட்டுள்ளது—ஆசிரியர், ரா.வி.]

காரியம் சரியாய் நடந்து வருகிறதா? மிக நன்று; இவ்வாறு செய்துவா. "துணைவன் கிடைத்தால் நல்லதே; இல்லையானாலோ நீ பொருவனே ஒரு கூட்டம்போல் ஆகிக்கொள்—சுவாமி விவேகாநந்தரது இந்த உபதேசத்தைக் கைவிடாதே. வேறு எவரைக் கருதவேண்டும்? குருதேவர் 'நான் உளேன், எனது தாயும் உள்ளாள்' என்று சொல்வார். போதும், வேறுயாரை நாடுவது? வேண்டுவது சரணாகதியே; சரணம் புகுவதில் ஒருவன் சமர்த்தனாகி விடுவானாயின், நாளடைவில் ஒவ்வொன்றும் அநுகூலமாகவே முடியும். ஸ்ரீராமகிருஷ்ணரது திருவுள்ளப்படி ஆகட்டும் என்று அவரிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிடு. பின்னால் என்ன நடக்கிறது என்பதைக் காண்பீர். "ஒரு பொம்மை (போலிப்) பழத்தைப் பார்க்கும்போது உனக்கு உண்மையான பழத்தின் ஞாபகம் எளிதே வருகிறது என்பர் குருதேவர். இம்மாதிரியே அவரது படம் உனக்கு அவரை ஞாபகப் படுத்தும். குருதேவரது படத்தைக் குருதேவராகவே கருதிக் கொண்டு, உன்னை அவரது ஸேவையிலும் பூஜையிலும் ஈடுபடுத்திக் கொள்க. உண்மையாகவே நீ அவரைப்பற்றிய பாவனை (உணர்ச்சியோடு கூடிய தியானம்) நிறைந்தவனாக ஆவாய். வா, மன உறுதியோடு முயற்சிசெய், மற்றவர் தமது பிரியப்படியே செய்யட்டும். உனது இஷ்ட தெய்வத்தை உனது நெஞ்சத்திற் கொண்டு, ஒரு பாறையைப் போல உட்கார்ந்து கொண்டிரு. உனது வாழ்வையும் மனதையும் அவரிடம் இலயிக்கும்படிச் செய். வீணாக அலைதலினால் நீ என்ன பெறப் போகிறாய்? நாள்கள் ஓடிக்கொண்டேயிருக்கின்றன—அவை ஒருக்காலும் திரும்பிவரப் போவதில்லை. முக்கியமான நோக்கத்தை மறந்துவிடாதே. அவரை உனக்குச் சொந்தமாக ஆக்கிக்கொள். பின்னர் மற்ற யாவும் தாமாகவே வந்தடையும்.

* * *

அவரது நெறியைப் பின்பற்றும் கருத்தோடு யாவனாயிருப்பினும் நமது பகவானையே (குருதேவரையே) சரணம் புகுந்தவனாகி உம்மிடம் வருவானாயின், அவனை உம்முடன் வைத்துக்கொள்ளும். பிச்சையெடுப்பதனால் ஆகாரம் கிடைக்கும்.

ஆதுல் சொன்னது சரி: 'ஆரம்பத்தில் வீடு பெற வேண்டும் என்ற உறுதி அவ்வளவு இருந்தது, இப்போது வீடு கிடைத்ததும், அதில் வாழ மனிதர் இல்லை! ஆனால் ஒருக்கால், வருங்காலத்தில், தங்குவதற்கு இடவசதி போதாதபடி அத்தனைபேர் வரலாம். ஒவ்வொன்றும் பல படிகள் வழியாகச் சென்றுதான் ஆகவேண்டும்.

மிக்க பொறுமை அவசியம். ஒருவன் பொறுமையாக மட்டும் ஒரு காரியத்தையே விடாது பற்றிக் கொண்டிருப்பானாயின், எல்லாம் அவனுக்கு அநுகூலமாகவே முடியும். மனிதர் பொறுமையைப் பற்றி நிற்க மாட்டாமையாலேதான் எதையும் பெறாது

போகின்றனர். அன்றேல், அவர்கள் தோல்வியடைதற்கு வேறு காரணம் இல்லை. பொறுமையோடு ஒன்றை விடாது பற்றிக் கொண்டிருப்பார்க்கு வெற்றி தடுக்கவொண்ணாதது.

வீராவேசத்தோடும் முழுமனதோடும் சிரத்தையோடும் உனது ஞான சாதனங்களைப் பழகிக் கொண்டுவா. பிறர் சொல்வதெல்லாம் உனது காதன் வழியாகச் செல்லவேண்டும். உனது சொந்த மனநிலையினின்றும் விலக இடங்கொடாதே. நீ வெற்றியடைவாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஸ்ரீராமகிருஷ்ணர்க்கு (வெற்றியுண்டாகுக) ஜே' உனது இடுப்பை இறுகக் கட்டிக் கொண்டு, காரியத்தில் குதித்து இறங்கு.

* * *

வேலையை நன்றாக நடத்திவருவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். உனது மனதையும் ஆன்மாவையும் முழுதும் செலுத்தி உன் வேலையைச் செய்ய இயலுமாயின், இம்மை, மறுமை இரண்டின் நலத்தையும் நாடுவதில் வெற்றியடைவாய். அந்தர்யாமியான பகவான் ஒவ்வொன்றையும் கவனிக்கிறார். சரியான முறையில் நியமிக்கிறார் 'மன நிலைக்குத் தக்கபடி இலாபமும்'—ஸ்ரீ ராமகிருஷ்ணரது இப்பரம உபதேசத்தை எப்போதும் ஞாபகப்படுத்திக் கொள்ள முயலுக.

இறைவனுடைய சங்கற்பத்தை அறிய யார்க்கும் திறமை இல்லை. பெருங் கேடுவழியாகவும் கடவுள் நன்மையைப் படைக்கிறார். வெளிப்பார்வைக்கு இவையனைத்தும் பெரும் நாசமயமாய்த் தோன்றினாலும், அவரது சங்கற்பத்தால் நன்மையே விளைந்தாதல் வேண்டும்; ஏனெனில் அவர் நன்மையின் வடிவமே யாவார், அன்பின் கடலே யாவர்.

* * *

மீரட் என்னும் ஊரில் கழித்த ஒரு காலத்தின் நினைவு இன்றும் எனது மனதில் பளீர் என ஒளிர்கின்றது. அங்கேதான் சுவாமி விவேகாநந்தர் இருஷிகேசத்தில் நோய்க்கு ஆளான பின்பு தமது முன்னைய உடல் நலத்தை மீண்டும் பெற்றார். அக்காலம் ஏறக்குறைய ஆறுமாதம் அவரோடுகூட இருக்கும் ஆனந்தத்தைப் பெற எங்கட்கு இயன்றது. அதேகாலத்தில் இன்னும் கங்காலில் மஹாராஜரைச் (சுவாமி பிரம்மாநந்தரைச்) சந்தித்தோம்; அதுமுதல் ஆறுவருடம் அவரோடு கழித்தோம். நாங்கள் மீரட்டில் தங்கியிருந்தபோது பெற்ற ஆனந்தம் வருணனைக்கு அடங்காதது. சுவாமிஜி (விவேகாநந்தர்) அந்நாளில், சாஸ்திர வாசிப்பு முதல் செருப்பைத் தைக்கும் தொழில்வரை என்று சொல்வது போல ஒவ்வொன்றையும் எங்கட்குப் போதிப்பது வழக்கம். சில சமயம் அவர் வேதாந்தத்தையும் உபநிடதங்களையும் விளக்குவர்; சில சமயம் ஒரு சம்ஸ்கிருத நாடகத்தை வாசித்து விட்டு, அதை எங்கட்கு விரித்துரைப்பார்; வேறுசமயங்களில் நல்ல சுவையான உணவுவகைகளைத் தயார் செய்யப் பயிற்றுவார்; இன்னும் எத்தனையோ விதம் வசமான முயற்சிகளில் எங்களை ஈடுபடுத்துவார் என்பதை நீயே கற்பனை பண்ணிக் கொள்ளலாம்.

அவரது பெருங் கவனிப்பும், அவரது அன்பும், அவருடைய கதைகளும், அவரோடு நாங்கள் உலாவச் செல்வதும்—இவையனைத்தும் எனது ஞாபகத்தில் ஜொலித்துக் கொண்டுள்ளன. அங்கிருந்து சுவாமிஜி தனிவழியே சென்றார். இன்னொரு முறை அவரை டெல்லியில் நாங்கள் சந்தித்தோம், அவரோடு ஒரு மாதகாலம் தங்கினோம். அதன்பின் அவர் எட்டு ஆண்டுகட்குப்பின் தான் மடத்திற்குத் திரும்பிவந்தார், அப்போது உலகத்தைத் திக்கு விஜயம் கொண்ட வீரராக மீண்டார். இதற்கிடையில் இன்னொரு முறை மஹாராஜரும் (பிரம்மாநந்தரும்) நானும் அவரைப் பம்பாயிற் கண்டு, சிலநாள் அவரோடு இருந்தோம்.

இன்று சுவாமிஜி பகவானோடு தங்கி வருகிறார். அவரைப் பற்றிய நினைவு எமது வாழ்க்கைத் துணையாகிவிட்டது இதுவே எமது தியானம், பஜனை, ஜெபம், தபம், சம்பாஷணை.

* * *

எவரையும் கட்டாயப்படுத்தி எதையும் செய்யச் செய்வது நன்றன்று, உனக்கும் உள்ளூரச் சம்மதம் இல்லையேல், நீயும் வெளியேறி விடலாம். ஆனால், ஒன்றைக் கவனமாகக் கருதுக, அவ்வளவு பெரிய சந்தர்ப்பமும் வாய்ப்பும் வாழ்க்கையில் நேருவது மிக அருமையே. இப்போது உனது நெஞ்சில் திருப்தி உண்டாகும்வரை 'நாராயணர்கட்கு' (பொதுமக்கட்கு) சேவை செய்திருக்க முடியுமானால், நீ உண்மையாகவே பாக்கியம் பெற்றவனாக ஆயிருக்கலாம். நீ உயிருள்ளவரை கருமஞ் செய்ய வேண்டியவனாவாய்; ஏனெனில் 'எவனும் ஒரு க்ஷணமேனும் கருமம் புரியாதிருக்க ஒருக்காலும் இயலாது' என்னும் கீதை; ஆனால் உனது கருமத்தைச் சாமர்த்தியத்தோடு செய்யக் கூடுமாயின் அது வெறுங்கருமமாகாது யோகமாகலாம்

"யோக: கர்மஸு கௌசலம்" யோகமே கருமத்தில் சாமர்த்தியமாகும். பகவானது கையில் ஒரு கைக்கருவிபோன்று அமைந்து, நீயே கருத்தா என்னும் எண்ணத்தை நீக்கி விட்டுக் கருமம் புரிதலும், கருமத்தின் முழுப் பயனையும் பகவானுக்கே சமர்ப்பித்தலும் இதுவே 'கருமத்தில் சாமர்த்தியம்' என்பதன் பொருளாகும். இல்லையேல், கருமத்தைக் கருமமாக அறியாது பூஜையாக எண்ணிச் செய்வானாயின, அது பூஜையைப் போலவே சித்த சுத்தியை உண்டுபண்ணும்; நாளடை வில் அது கருமஞ் செய்வோனை விடுவிக்கும். உங்கள் அனைவர்க்குமாகவே சுவாமிஜி நாரா யண' ஸேவையை (ஏழைமக்கட்குச் செய் யும் ஸேவையை) ஏற்படுத்தியுள்ளார்; அதைச் சரியானபடி கையாளாவிடில் மிக வும் வருந்த வேண்டியிருக்கும். உனக்கு எது சரியாகத் தோன்றுகிறதோ அதைச் செய். உங்களது நன்மைக்கென்றே பாபு ராம் மஹராஜ் (பிரேமானந்தர்) இவ்வளவு பாடுபடுகிறார்.

கூடுமானால், நாராயண ஸேவையை விட்டு விடாதே. இதனால் உனக்கு நன்மையே விளையும். சரியான மன நிலையிலிருந்து (நோக்கோடு) ஸேவை செய்; அவ்வாறு நடக்கிறதா இல்லையா என்பதைக் காண்க. சரியான மனநிலையில் ஒருவன் முற்றிலும் உறுதியாக நிற்கவேண்டும; இல்லையேல், எல்லாம் பாழாகும்.

நமது சிகர ஜோதி

உள்ளத்தின் கீழ்ப்பகுதி

'உள்ளம்' (மனம்) என்பது யாது? அதில் பகுதிகள் உள்ளனவா? அதின் தொழில் யாது? உள்ளம் எவ்வாறு வேலை செய்கிறது? உள்ளத்தின் தொழிலைக் கட்டுப்படுத்துவன எவை? உள்ளம் எவ்வாறு ஆற்றலுள்ளதாகி றது? எவ்வாறு பலவீனமடைகிறது? இக் கேள்விகட்குரிய விடைகளை அறிவது எல் லோர்க்கும் மிகமிக அவசியம் என்பது எவர்க்கும் எளிதில் விளங்கும்; ஆயினும் இவற்றையெல்லாம் பற்றி விரிவாக ஆராயும் உள்ளநூலைப் பற்றிய அறிவு பலரிடமும் மிகக் குறைவாகவே உள்ளது. உள்ளத்தின் இயல்பை நன்கு அறியும் அளவிற்கு அதனை அடக்கியாளும் திறமை நமக்கு மிகும். உள் ளத்தை அடக்கியாளும் வலிமை பெறுவ தினால் நமது அறிவையும் அன்பையும் ஆற்ற லையும் இன்பத்தையும் நினைத்த அளவிற்குப் பெருக்கி வாழலாகும். உள்ளமே வாழ்வை உயர்த்துவது, வாழ்வைத் தாழ்வாக்குவதும் உள்ளமே. நரகத்தைச் சுவர்க்கமாக்குவ தும் உள்ளமே, சுவர்க்கத்தை நரகமாக்குவ தும் உள்ளமே. பந்தத்திற்கும் மோக்ஷத் திற்கும் காரணம் உள்ளமே. மனம் போலே வாழ்வு என்பர். மனிதனது உயர்வு அவனது மனத்தின் உயர்வையே பொறுத்ததாகும். ஆதலின் உள்ளத்தைப் பற்றிய அறிவைப் பெறுதல் ஒவ்வொருவருக்கும் கடமையாம்; அதிலும், தன் உள்ளத்தை ஆராய்ந்து, அதைப்பற்றிய உண்மையறிவைப் பெறுதல் எவர்க்கும் முதற்கடமையாகும்.

நமது உள்ளத்தை நாம் அறிவோம் என்று சொல்லும்போது, நம்மில் மிகப் பெரும்பாலர் நமக்குத் தெரிந்த நனவு உள்ளத்தையே குறிக்கிறோம். இவ்வுள்ளமே உள்ளத்தின் முழுமையும் அன்று என்பதைப் பெரும்பா லார் உணர்வதில்லை. நமக்குத் தெரியாத உள்ளப் பகுதியொன்று உண்டு என்பதை முதலில் நாம் அறிதல் வேண்டும். நமது உள் ளத்தின் தொழில்கள் மூன்றை—அதாவது, நினைத்தல், இன்பதுன்பங்களை உணர்தல், சங் கற்பித்தல் எனும் மூன்றையும் உணர்ந்ததும், அதிலிருந்தும் உளளத்தின் இயல்பைப் பற்றி முடிபுகட்ட ஆரம்பிக்கிறோம். இது தவறு. சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்பு வரை மேலை நாட்டு உள்ள நூலார் 'தெரிந்த உள்ளத்தின்' நிலைமையைப் பற்றிய ஆராய்ச் சியில் மட்டும் ஈடுபட்டு வரலானார்; தத்துவ நூலாரும் நனவு நிலையொன்றனையே முக்கிய மாகக் கருதியிருந்தனர். சிலநோயாளிகளின் மனக்கோளாற்றினைப் பற்றி ஆராயத் தொடங்கிய சில நிபுணர்களே, மனிதர்களின் உள்ளங்களை உற்றுநோக்கி அறியும்போது, ஒரு மனிதனது தெரிந்த உள்ளத்தின் நிலை மையும் அவனது ஒழுக்கமும் அவனுக்கோ பிறர்க்கோ தெரியாத ஓர் உள்ளப்பகுதியைப் பெரிதும் பொறுத்துள்ளன என்பதை அறிய லானர். பிறகு மனத்தை வசியம் பண் ணும் முறைகளைப் பற்றிச் சோதனை செய்து வந்த காலத்து, மனித உள்ளத்தின் மறை வான பகுதியே அவனது நனவுநிலை முயற்சி களை அடக்கியாளுகின்றது என்ற உண்மை யைப்பின்னர்க்கண்டறிந்தனர். நாளடைவில் அம்மறைவான பகுதியின் நிலைமைகள் சில சாதாரண மனிதனது உணர்விற்கு எட்டாது

போயினும், மிக்க சக்தி வாய்ந்துள்ளன என்பதையும், அவை மிகச் சுறுசுறுப்பாக வேலை செய்து ஒரு மனிதனது நனவு முயற்சிகளையும் ஒழுக்கத்தையும் பெரிதும் மாறுபடுத்துவன என்பதையும் நிபுணர் நிலைநாட்டினர். தெரிந்த உள்ளம், நனவு உள்ளம், மேற்புற உள்ளம், — இவை மூன்றும் ஒன்றையே குறிக்கும். தெரியாத உள்ளத்தைக் கீழ்ப்புற உள்ளம் என்றும், ஆழ்ந்த உள்ளம் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். கீழ்ப்புற உள்ளம் நனவுள்ளத்தை யொட்டி அதற்குச் சற்று அடியிலே உள்ளது; அப் பகுதியிலுள்ளவை மிக எளிதாக அடிக்கடி நனவுள்ளத்திற்குக் கிளம்பி வரும். ஆழ்ந்த உள்ளத்தில் உள்ளவை மிக அபூர்வமாகவே சில சமயங்களில் மட்டும் மேலெழுந்து மேற்புற உள்ளத்திற்கு வரும். இவ்விரு பகுதிகளையும் சேர்த்துக் குறித்தற்கு 'அடியுள்ளம்' என்ற பதத்தைக் கொள்வோம். 'மேலுள்ளம்' என்று மேற்புற உள்ளத்தையும், 'கீழுள்ளம்' என்று கீழ்ப்புற உள்ளத்தையும் சுருங்கக் கூறுவோம்.

கீழுள்ளத்தின் இருப்பினை உணர்வதும், அதன் இயல்பினை ஆராய்வதும் ஒரு மனிதனது வாழ்விற்குப் பெருநன்மை பயக்கக் கூடியதாகும். ஒரு மனிதனது தனிப் பண்புக்கும் (அவனை வேறொருவனிடமிருந்து பிரித்தறிதற்கு உதவும் முழு இயல்புக்கும்) அவனது கீழுள்ளத்திற்கும் உள்ள சம்பந்தம் அனைத்தினும் மிக நெருங்கியதும் உயிரனையதும் ஆகும். ஒருவனது ஒழுக்கம் இத்தன்மையதாகும் என்பதைத் தீர்மானிக்க வேண்டின் அவனது கீழுள்ளத்தின் நிலைமைகளை நாம் முழுவதும் அறிந்திருத்தல் வேண்டும். ஒருவனது உள்ளத்திற் பெரும்பாகம், தனக்கோ பிறர்க்கோ தெரியாத அடியுள்ளத்திலே அமைந்துள்ளது. ஒரு பனிப்பாறை கடலில் மிதக்கும்போது, சுமார் அரைக்காற் பங்கு அளவுமட்டும் நீர் மட்டத்திற்கு மேலே தெரியும் என்று தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்; அதுபோன்றே அடியுள்ளம் மேலுள்ளத்தினும் பன்மடங்கு பரந்ததாகும், மறைந்துள்ளதுமாகும். நனவு உள்ளத்தைக் கீழுள்ளத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்போமாயின், பின்னது முன்னதினும் அதிக சக்தி வாய்ந்ததாகவும் மிக்க சுறுசுறுப்பாக வேலை செய்வதாகவும் காணப்படுகிறது. 'காணப்படுவதினும் காணப்படாதது பெரியதும் பரந்ததும் ஆகும்' எனும் உண்மை உள்ள நூலுக்கும் பொருந்துவதாகும். மேற்றிசை உள்ள நூலறிஞரிற் பலர், மனிதனது நனவு நிலை நடத்தையும் முயற்சிகளும் அவனது கீழுள்ளத்தின் நிலைமைகளையே முற்றிலும் பொறுத்தனவாகும் என்று தீர்மானமாகக் கூறுகின்றனர். பலமுறையும் ஒரு மனிதன் தனது வாழ்க்கையிலே தானோ பிறரோ எதிர்பாராத சில செயல்களை இயற்றிவிட்டு, "யான் இவ்வாறு ஏன் நடந்தேன்?" என்று தன்னைத் தானே வினவிக் கொள்கிறான். அவனுக்கோ பிறர்க்கோ நனவு நிலைச் செயல்கள் மட்டும் விளங்குமாதலின், அந்நனவு நிலையை மீறிய செயல்களைக் காணுங்கால், காரணம் கூற மாட்டாது திகைக்கின்றனர். நனவுள்ளமே ஒழுக்கத்திற்கு மூல காரணம் என்ற அவரது நினைப்பு தவறானது என்பதை அப்போது உணர்கின்றனர். ஒரு மனிதனது நடத்தைக்கு அடிப்படைக் காரணமாவது கீழுள்ளமே யென்பதும், அதனின்றும் கிளம்பி மேலுள்ளத்திலே தோன்றும் சில குமிழிகளே நனவுள்ளம் என்பதும் இப்போது நிலைநாட்டப்பட்டுள்ளன. உண்மையைக் கூறுவோமாயின், கீழுள்ளத்தின் ஒரு பகுதியே உள்ளத்தின் மேற்பரப்பிற்கு வந்து மேலுள்ளமாக மாறுகிறது என்னல் வேண்டும். கீழுள்ளத்திலே அடங்கி மறைந்து கிடப்பன நமது பழவினைப் பயன்களாகிய ஸம்ஸ்காரங்களே (செயற் பதிவுகளே) என்று இந்துமத சாஸ்திரங்கள் கூறுகின்றன. சுவாமி விவேகாநந்தர் தமது 'கருமயோகம்' என்னும் நூலில் பின்வருமாறு கூறுகின்றனர்: "மனமாகிய குளத்தில் கருமமாகிய கல் விழ எழுந்த சிற்றலைகள் முற்றிலும் அழிந்து போகாமல், தாம் திரும்பி வருதற்கு அறிகுறியாகிய அடையாளங்களை விட்டுச்செல்கின்கின்றன. இவ்வடையாளங்களே சம்ஸ்காரங்களாவன. நாம் செய்கிற ஒவ்வொரு தொழிலும், சரீரத்தின் ஒவ்வோர் அசைவும், நினைக்கிற ஒவ்வோர் நினைவும் மனதில், சம்ஸ்காரங்களைப் பதியச் செய்கின்றன. இவை புறத்தே தோற்றுவதற்குத் தக்க வலிமையில்லாதிருப்பினும் அடங்கியிருந்து தொழில் செய்யும் இயல்பின. இந்த நிமிஷத்தில் நான் இருக்கும் நிலைமை இதற்கு முன்பாக நான் செய்துகொண்ட சம்ஸ்காரங்கள் அனைத்தினாலும் காரியப்பட்டது; இவ்வாறு காரியப்பட்ட நிலைமையே எனது தன்மை எனப்படும்." ஆக கீழுள்ளத்தினைப் பற்றிய ஆராய்ச்சி எவ்வளவு பயனுள்ளது என்பதும் கீழுள்ளத்தில் உறையும் பொருள்களைப் பொறுத்தே ஒரு மனிதனது பண்பு அமைகிறது என்பதும் நன்கு புலனாகின்றன.

நமக்கு மறைவாயுள்ள, வேடம் புனையும் அறையினின்றும் புறப்பட்டு, நாடக அரங்கத்தின் மீது (மேடைமீது) நடித்துவிட்டுத்

திரைக்குப் பின் மறையும் ஆண்கள் பெண்களைப் போலவே, எண்ணங்களும், உணர்ச்சிகளும், சங்கற்பங்களும் கீழுள்ளத்திலிருந்தும் கிளம்பி மேலுள்ளதே நடித்து விட்டு, மீண்டும் தமது உறைவிடத்திற்கே செல்கின்றன; அவை இறப்பதில்லை. மேலுள்ளம் இதனால் நடன அரங்கமாகின்றது.

இன்னும் நன்றாக உள்ளத்தை ஆராயும்போது உள்ளம் ஒரு பெரும் போர்க்களமாகவும் அமைகிறது. உள்ளத்திலே ஒன்றுக்கொன்று முரண்பட்ட இச்சைகளும் உணர்ச்சிகளும் கருத்துக்களும் அபிமானங்களும் பல சமயங்களில் ஓயாது போராடிக்கொண்டு, ஒன்றையொன்று வெல்ல முயலுகின்றன. இப்போர் நமக்குத் தெரிந்தே மேல் உள்ளத்தில் நடத்தல் உண்டு. சில சமயம் நமக்குத் தெரியாமலே கீழுள்ளத்தில் நடத்தலும் உண்டு. பல ஆண்டுகளாகத் தமையனது நிலத்தையும் இதர சொத்துக்களையும் அவனது பூரண சம்மதத்தினாலும் நம்பிக்கையாலும் தம்பியே மேற்பார்த்தும், கிடைக்கும் வரும்படிகட்குத் தக்க கணக்குகள் வைத்தும் வந்திருப்பான்; அக்கணக்குகளைத் தமையன் ஒப்புக் கொண்டதற்கு அடையாளமாகக் கையெழுத்தும் வைத்திருப்பான். ஆனால் கணக்கில் தனக்குள்ள தொகையைப் பதினைந்து ஆண்டுகட்குப் பின் ஒருநாள் கொடுக்குமாறு தமையன் தம்பியிடம் கூற, அவன் மிகச் சொற்பத் தொகையைக் காட்டி 'இவ்வளவுதான் உனக்குரியது' என்று சொல்லி, அதைக் கொடுத்து விடுவான். தமையன் அப்போது தம்பியின் வஞ்சனையை உணர்வான்; தான் ஏமாற்றமடைந்தமையால் மனம் வருந்திச் செல்வத்தை இழந்து பரிதவிப்பதோடு, தனது தம்பியிடமிருந்து உரிய தொகையைப் பெற வழியில்லாமையை உணர்ந்து பெருஞ் சீற்றத்திற்கு ஆளாவான்; அடக்கமுடியாது மேலெழும் சீற்றம் ஒரு பக்கம்; அச்சீற்றத்தைத் தம்பியின் மேற் செலுத்தி, அவனை வற்புறுத்திப் பணத்தைப் பெறுதற்கு யாதொரு வகையுமின்றித் தத்தளிப்பதும், குணத்தையறியாது நம்பிக்கை வைத்தமைக்காகத் தனது அறிவின்மையைக் கருதி மனம் நொந்து கொள்வதும் மற்றொரு பக்கம். தம்பியிடமிருந்து உரிய பெருந்தொகையைப் பெறவும், அவனைத் தண்டிக்கவும் பெரு விருப்பம் இருப்பினும், அதை நிறைவேற்ற வழியில்லாமையால் தமையனது மனம் பெருந்துயருழக்கும். அடக்கமுடியாத நியாயமான சீற்றத்தை அவன் பலவந்தமாக அடக்க வேண்டியது அவசியமாகின்றது; அங்ஙனம் செய்ய முயற்சிக்கிறான். இது உள்ளத்தைப் பாதுகாத்து அமைதியாக வைக்கும் நோக்கத்தோடு செய்யப்படுதலின், இம்முயற்சி 'பாதுகாப்பு எதிர்வினை' எனப்படும். கீழுள்ளத்தினின்றும் எழும் நினைவுகளையும் சார்புகளையும் பன்முறை இவ்வாறு மேலுள்ளம் ஒப்புக்கொள்ளாது எதிர்த்துக் கீழே அமுக்கும்; அவை மேலெழும்போது விருப்பாலோ வெறுப்பாலோ மனம் துன்ப முறுதலின், அவற்றைப் பலவந்தமாக அடக்குவதன்றி அமைதிக்கு வேறு வழி காண்பது அரிதாகின்றது. நமது தகுதிக்கு ஒவ்வாதனவும், அறிவுடையாரால் இகழப்படுவனவும், துன்பம் விளைவிப்பனவும் ஆன பல தூண்டுதல்களும் இச்சைகளும் பாவனைகளும் உணர்ச்சிகளும் கீழிருந்து எழும்போது, அவற்றைத் தடை செய்யவும் அடக்கவும் முயல்கிறோம்; இதனால் அவை மறையும்போது, அவற்றை ஒழித்து விட்டதாகக் கருதுகிறோம். ஆனால் உண்மையாக அவை ஒழிந்துவிடுவதில்லை. அவை நமக்குத் தெரியாமலே கீழுள்ளத்திலே மறைவாகப் போற்றப்பட்டு வருகின்றன. சமயம் வருங்கால் திடீரென அவை வேகத்தோடு வெளிக் கிளம்பிச் சுறுசுறுப்பாக இயங்கி, நம்மிடம் தமக்குரிய வேலையை வற்புறுத்தி வாங்கிக் கொள்கின்றன. "முயற்சியுடைய அறிஞனயினும் அவனுடைய இந்திரியங்கள் வரம்பு மீறிச் சென்று, தம்முடன் அவனது மனத்தையும் வலிய இழுத்துச் செல்கின்றன" என்னும் கீதை. வலிமையுடைய இச்சைகளையும் (விருப்பு, வெறுப்புகளையும்) சார்புகளையும் நீண்ட காலம் கீழுள்ளத்தே கட்டாயப்படுத்தி அடக்கி வைப்போமாயின், அவை தமது வேகத்தை வேறு வழியில் செலுத்தி நரம்பு மண்டலத்தைத் தாக்கி நரம்புக் கோளாறுகளையும், நரம்பு நோய்களையும், மூளைக்கோளாறுகளையும் உண்டாக்குகின்றன. கட்டாய அடக்கு முறைக்கு உட்பட்ட விருப்பு வெறுப்புகளும், இயல்பாயெழும் இச்சைகளும் வெளிப்பட வழியின்மையால் உள்ளத்தைத் தாக்கி, பல சில்லரைப் பிணிகளையும் பெருநோய்களையும் உண்டாக்குகின்றன. பலமான இச்சைகளை நிறைவேற்ற வழியின்றிப் பலவந்தமாக அடக்கி வைக்கும் பெண்கள் மூர்ச்சை நோயாலும் வலிப்பு நோயாலும் வருந்துதலும், பேரன்பிற்குரிய கணவனைத் திடீரென இழந்த ஒரு நங்கை பிரிவுத் துயரையாற்றாது நீரிழிவு, புற்று நோய் முதலியவற்றுக்கு ஆளாவதும், ஆசையொடு பாடுபட்டுச் பன்னாட் சேமித்து வைத்த பெருந் தொகையை ஒரு கணத்திலே இழப்பதனால் பைத்தியங் கொள்ளலும்

இவற்றுக்கு நேர்சான்றுகளாம். இன்னும் பலவந்த அடக்கம் மேலுள்ளத்து நிகழாது கீழுள்ளத்தே நமக்குத் தெரியாத நிலையிலும் நிகழ்வதுண்டு. கல்வியறிவு பெருத குறை யுணர்ச்சி மிக்கவன் ஒருவன் அதைப் பல வந்தமாக அடக்கிவைக்கிருன்; நாளடைவில் அவ்வுணர்ச்சி உள்ளடங்கி, நாமறியாதே நம்மை மிகத் தெரிந்தவர் போல நடிக்கவும் ஒதுங்கியிருக்கவும் தூண்டிவிடும். தீய பழக் கத்திற்கு ஆளான தன்மையைத் தானறி யாதே மறைக்க முயலும் ஒருவன் நனவு நிலை யிலே அளவுக்கு மிஞ்சிய ஆசாரசீலனுக ஒழுகுவான். இதனுல் கீழுள்ளத்து நாமறி யாது நிகழும் தடை அடக்கி வைக்கப்பட்ட இச்சைகளை மாறுவேடம் பூண்டு நல்லன போல வெளித்தோன்றச் செய்கின்றது என் பது அறியப்படுகிறது.

கீழுள்ளத்துப் பலவந்தமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள விருப்பு வெறுப்புகளால் விளையும் கோளாறுகளை நீக்கிக் கொள்வதற் காகச் சில முறைகளை மக்கள் கையாளுகின் றனர். அறத்திற்கு மாருன ஆசைகளையும், நிறைவேற முடியாத இச்சைகளையும் முரட் டுத்தனமாக அடக்குவதற்குப் பதிலாக நல் லோர் அவற்றை 'உயர் நெறித்திருப்பல்' எனும் ஒரு முறையால் வெளிப்படுத்த முயன்று, இயல்பான வாழ்வு பெற்று, இன் பமும் அமைதியும் எய்துவர். இம்முறை சிறந்த முறையேயாம். வெள்ள நீரை ஒரு மடைவழியாகச் செலுத்த வாய்ப்பு இல்லாத போது, வேருெரு தக்க மடைவழியாகப் பெருக விடுதலால், ஆற்றின் கரைகட்கு நேரக்கூடிய ஆபத்து நீங்குகின்றது. இளம் பருவத்தே தனது அன்புக்கொடி வளர்தற் குக் கொள் கொம்பாயிருந்த நாயகனை இழந்த ஓர் இளம் பெண் வாழ்விலே இன்ப மும் அமைதியும் பெறுதற்பொருட்டு மருத் துவங் கற்றுப் பெண்மக்கட்குத் தொண்டு செய்து மகிழும் துறையில் இறங்கலாம். இம் முறையில் உள்ளத்தூறும் உணர்ச்சிப் பெருக்கும் சக்தியும் நோயால் வருந்தும் பெண்மக்கட்குப் பணி செய்யும் துறையில் செலுத்தப்படுவதால், அவற்றைப் பலவந்த மாக அடக்கித் துன்புறும் நிலைமை நீங்குகி றது. அன்பு படர்தற்குரிய ஒரு கொள் கொம்பு பறிக்கப் படும்போது, மற்ருென்றை அவ்விடத்திலே அமைத்தலால் அதன் வளர்ச்சி தடைப்படாது இனிதே திகழ்கின் றது. இயல்பாக உள்ளத்தின் அடியினின் றும் எழும் ஓர் ஊக்கத்தை அதற்குரியதோர் வழியினின்றும் திருப்பி வேருெரு மடைவழி யாகப் பெருகவிடும்போது, மனநிலையின் வேகம் நரம்புகளையோ உடலையோ தாக்காது காக்கப் படுகின்றது. ஆசைக்குரிய ஓர் இலக்ஷியம் கைகூடாத போது அதற்குப் பதி லாக வேருேர் இலக்ஷியம் மெல்ல மெல்ல உள் ளத்தே நிலைநாட்டப்படுகிறது; வாழ்க்கைக்கு உயிரூட்டிய ஒரு நோக்கம் கருகி மாய்ந்த இடத்தே வேருெரு நோக்கம் முளைக்கின் றது. தன் அருமைப் பிள்ளைகளைக் கூற்றுவ னுக்கு இரையாகக் கண்ட தந்தை அனுதைப் பிள்ளைகளை அன்பொடு பேணிவளர்க்கத் தலைப் படுகிருன்; அறிவுத்துறையிற் புகழ்பெற்று விளங்கும் இச்சையை நிறைவேற்றும் வழி அடைக்கப்படும் போது, சங்கீதக் கலையிலோ சிற்பக் கலையிலோ, நாட்டியக் கலையிலோ புகழை நாடும் புது வழியை அமைத்துக் கொள்ளுகிருன். இவ்வுபாயத்தாலே ஒருவன் தனது பழைய பலமான உணர்ச்சியையும் கிளர்ச்சியையும் ஒருவாறு மறந்து விடுகி ருன்; தீய தூண்டுதலையும் அறநெறியில் திருப்ப முயன்று திருப்தி பெறுகிருன். இம் முறை ஆக்கச் சக்தியை வளர்த்து, மனப் போராட்டத்தால் தயங்கும் ஒருவனுக்குப் புத்தொளியைச் சொரிகின்றது; காம உணர்ச் சியோ அதிகாரம் செலுத்தும் உணர்ச்சியோ பலமாக உள்ளத்தைத் தாக்கும்போது, அதனை நினைத்தவாறு நிறைவேற்ற முடியாத நிலையில், சித்திரக் கலைத்துறையிலோ பரோப கார முயற்சியிலோ திருப்ப முயலுதல் பெரும் பயனை விளைக்குமாயினும், அம்முறை நிலையான வெற்றியைத் தரும் என்னும் உறுதி இல்லை. வாடி வதங்கிய பழைய பல மான உணர்ச்சிகட்கு ஊட்டமளிக்கக்கூடிய சூழ்நிலைகள் தாமே நேருமாயின் அவை பந்துபோலக் குதித் தெழும். அவ்வாறு எழும்போது, புதிதாக ஏற்படுத்திய வரை யறைகளும் பாதுகாப்பு வேலிகளும் அவற் றின் வேகத்திற்கு ஆற்ருது சிதையும். கீழுள் ளத்தே மறைந்துகிடக்கும் பழவினைப் பயன் களான சார்புகளின் வலிமை இத்தன்மை யது.

வேறு சிலர் உயர்வழித்திருப்பல் எனும் உபாயத்தை மேற்கொள்ளாது, தமது கீழுள் ளத்துறையும் பாழ்பட்ட ஆசைகளையும் போராட்டங்களையும் நிலை குலைவுகளையும் மறத்தற்பொருட்டு, கள்ளையும் கஞ்சாவையும் அபினையும் கையாளுகின்றனர். மனத்தைக் குடையும் துயரங்களினின்றும் தப்பிப் பிழைக்க அவர்கள் முயல்வது உண்மையே எனினும் அது உய்யும் வழியாக மாட்டாது. இம்முயற்சியாற் பெறும் துன்ப நீக்கம் நிலை யானதன்று, சிறிது காலத்திற்கேயாகும்; அன்றியும், ஓர் ஆபத்தினின்றும் விலக

நினைந்த அவர் அதனினும் கொடியவேறோர் ஆபத்திற்கு ஆளாகின்றனர். கள்ள நரம்பு வெறியும் மனவெறியும் துயரமறதியும் சுக உணர்ச்சியும் சிறிது நேரம் அன்னார் பெறுகின்றனர் எனினும், மூளைக்கும் நரம்பு மண்டலத்திற்கும் மது முதலிய மயக்கப் பொருள்கள் விளைக்கும் கேடு கொலையனையதாகும். அப்பொருள்களின்மீது நாளடைவில் ஆசை முற்றி, அவைகளைப் பெறுதபோது நரக வேதனையை நல்கும் ஆயினும் இப்பழக்கங்கட்கு மூலகாரணம் ஒழியாது மறைந்து வாழும். இப் பழக்கங்கட்கு ஆட்பட்டார் நாளடைவில் தமது மன வலிமையைச் சிறிது சிறிதாக இழந்து, உணர்ச்சிகட்கு எளிதே வசப்பட்டு, அடக்கம் எள்ளளவும் இன்றி அல்லலுறுவர். நரம்பு மண்டலம் முழுதும் கோளாறடைந்து, உடலுறுப்புகளின் தொழில்கள் ஒழுங்காக நடைபெறுமையால் விளையும் நோய்கள் வளரும். ஆக, மயக்கப் பொருளை நாடும் முயற்சியால் மனம் நிலை குலைவதோடு நில்லாது, தனித்தனிக் கூறுகளாகப் பிரிந்துவிடும்.

உள்ளத்தூறும் உணர்ச்சிப் பெருக்கையும் இச்சையையும் வலிந்து அடக்கும் முறை கேடுதருவது என்பதை இந்து உள்ள நூலாரும் ஒப்புக் கொள்கின்றனர். உள்ளச் சார்புகளைப் பலவந்தமாக அடக்குவதனுல் மனத்தே சிக்கல்கள் (முடக்குகள்) ஏற்படுகின்றன. இச்சிக்கல்களால் ஒருவன் காரணமின்றியே பய உணர்ச்சிக்கும், விசித்திரமான மேன்மை தாழ்வு உணர்ச்சிகட்கும், நரம்புப் பிணிகட்கும் ஆளாகிறுன். கீழுள்ளத்தில் முடங்கிக் கிடக்கும் பழவினைச் சார்புகளே சிக்கல்கட்கும் அவற்றின் பயன்கட்கும் காரணமாதலின், அடக்கு முறைக்கு வசப்பட்டுக் கீழுறையும் சார்புகட்குத் தடையின்றி வெளிவர இடங் கொடுப்பதால் மன நோய்களும் நரம்பு நோய்களும் தீர்ந்துவிடும். மேற்றிசை உள்ளப் பகுப்புநூலறிஞரான மருத்துவர் சிலர் இம் முறையால் அந்நோய்களை ஒழித்துவிடுகின்றனர். இம் முறை மனப் பகுப்பு முறைச் சிகிச்சை யெனப்படும்.

இச் சிகிச்சை முறையில் அடங்கியுள்ள அடிப்படைக் கொள்கைகளாவன: 1. கீழுள்ளத்திலே நமக்குத் தெரியாது அமுக்கப்பட்டு உறையும் இச்சைகளும் உணர்ச்சிகளும் சிக்கல்களும் (முடக்குகளும்) மனத்திலும் நரம்பு மண்டலத்திலும் ஒருவித விறைப்பை உண்டு பண்ணி, இரண்டையும் நிலைகுலையச் செய்கின்றன: 2. இந்நிலைகுலைவை நீக்கி இயல்பான சுக நிலையை மீட்ட வேண்டின், அக்காரணங்களின் இருப்பை முதலில் உணர வேண்டும், பின்னர் அவற்றுக்கு நேரான இயல்பான போக்கு விடல் வேண்டும். நோயாளி தன் கீழுள்ளத்து மறைவாக நிகழும் விறைப்பு நிலையையும் முடக்கு நிலையையும் கண்டறியும் அக்கணமே, அவனது நோய் தீரும் வழி பிறக்கின்றது; இன்னின்ன இச்சைகளும் உணர்ச்சிகளும் தடைப்பட்டுக் கிடக்கின்றன என்பதை உணர்ந்ததும், அவற்றைத் தடை நீக்கி வெளிப்படுத்த முயல்கிறுன். இவ்வாறு நோயாளிகளின் நிலைகுலைவைச் சரிப்படுத்தற்குத் துணையாக இரு முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன: 1. புதுக் கருத்தைத் தானுகவோ பிறருதவியாலோ ஊட்டும் முறை 2. உள்ளத்தின் நிலையைத் தானுகவோ பிறருதவியாலோ ஆராய்ந்து காணும் முறை.

புதுக் கருத்தை ஊட்டும் முறையில், அக்கருத்தை நோயாளிக்கு மருத்துவரே ஊட்டலாம். (இம்மருத்துவர் உள்ளப் பகுப்பு நூல் அறிஞராகலாம்.) அக்கருத்தை நோயாளி ஏற்றுக் கொள்வானுயின், அது உள்ளத்தினுள்ளே புகுந்து, உட்போராட்டத்தை ஒழித்து, இயற்கை நிலையை மீளச் செய்யும். அக்கருத்து அவனிடத்து உறையும் ஒரு பலமான உள்ளக் கிளர்ச்சிக்கும் வேறொரு சார்பிற்கும் உள்ள போராட்டத்தையும் முரண்பாட்டையும் தவிர்த்து, மனத்தை நிலைகுலையாத தன்மையில் அமர்த்தும். இக்கருத்து நோயாளியின் மனத்தில் உட்புகுந்து தொழிற்பட வேண்டுமாயின், அதனை உந்தும் மருத்துவனது உணர்ச்சியும் இடம் பெயர்ந்து நோயாளியின் உள்ளத்திற் புக வேண்டும். இதனை இந்துமத உள்ள நூலார் வேறுவகையாகக் கூறுவர். மருத்துவனும் நோயாளியும், குருவும் சிஷ்யனும் போல, மனமொத்த நட்பு உணர்ச்சியால் பிணைக்கப் பட்டிருத்தல் வேண்டும். நோயாளி மருத்துவனது உதவியை ஏற்கும் மன நிலையிலிருந்தாலன்றி, நிலையான பயனைப் பெறமாட்டாதவனுவன். ஊட்டிய புதுக்கருத்தால் உணர்ச்சியின் விறைப்பு நீங்கித் தற்கால சாந்தி ஏற்படலாம்; மருத்துவனின் அன்பார்ந்த இன்சொல் நோயாளியின் மனவருத்தத்தைப் போக்கி முரண்பாட்டை மட்டும் தீர்க்கலாம். ஆயினும், உள்ளம் கூறுபடாத முழுமை நிலையை அடையுமட்டும், உணர்ச்சியின் விறைப்பும் போராட்டமும் வேரோடு மாயுமட்டும், நிலையான மனச்சாந்தி கைகூடாது. அது நிகழவேண்டின், நோயாளி மருத்துவன் மீது மனமொத்த

அன்பும் நம்பிக்கையுமுடையவனாய், அவனது உரையை எதிர்க்காது பணிந்து நன்றியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுபோன்றே மருத்துவனும தனது மனத்தின் முத்தொழில்களையும் ஒன்றுக்கொன்று முரண்பாடின்றி இசைந்தொழுகுமாறு பழக்கியிருத்தல் வேண்டும்; அதாவது நினைவுக்குத் தக்க உணர்ச்சியும், அவ்விரண்டிற்கும் பொருத்தமான சங்கற்பமும் ஒருங்கே இலகவேண்டும். இம்மன முழுமைப்பாடு நிகழ்தற்பொருட்டு, அவன் சமய நூலறிவும் சமய ஒழுக்கமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றிருத்தல் வேண்டும. மகனையிழந்த துயரத்தால் நிலைகுலைந்த உள்ளத்தோடு ஸ்ரீராமகிருஷ்ணரைச் சாரும் அன்பர்கள் அவரது வாயினின்றெழும் ஆறுதலைப் பொழியும் இன்சொற்களைச் செவிமடுத்ததும் நிலைத்த, மனமாற்றம் அடைந்து இயல்பான நிலை மீளப் பெற்று இல்லஞ் செல்வர்.

நோயாளியே பிறரது உதவியின்றித் தானே தனது நிலைகுலைந்த மனதிற்கு ஒரு புதுக்கருத்தைப் புகட்டி அமைதியாக்குவான். அவன் தனது நிலையைப் பற்றிய சிந்தனையாலும் ஆராய்ச்சியாலும், தனது மனப் போராட்டமும் அமைதியின்மையும் உள்ளத்தைக் கலக்கி வருவதை உணர்கிறான்; அவ்விரண்டின் பயனாக, நரம்புக் கோளாறுகளும் மனக் குழப்பமும் நெஞ்சுபுண்ணாதலும் கவலைகளும தூக்கமின்மையும் பிணியும் விளையக்கூடியதையும் உணர்கிறான். தனது கீழுள்ளத்தினின்றும் உணர்ச்சிப் பெருக்கை அடக்கமுடியாமையால், ஆக்கச் சக்தியையும் ஸமரசத்தையும் ஒருமைப்பாட்டையும் தரும் ஒரு புதுக் கருத்தினை ஓர் உயர்ந்த இலக்ஷியத்தின் வடிவமாகவோ வாழ்க்கையைப் பற்றிய தத்துவ வடிவமாகவோ தன் உள்ளத்திற்குப் புகட்டுகிறான். தன் உள்ளத்தை அதற்கு இணங்குமாறு பழக்கியும் பயிற்றியும் வருவதினாலே பின்னர் தனது மனத்தின் நிலைகுலைவைத் தீர்த்து இயற்கை நிலைக்கு மீளச் செய்கிறான்; அப்போது நரம்புக் கோளாறுகளும் சில்லறைப் பிணிகளும் மறைந்து போகின்றன. இந்துமத உள்ள நூலார் இம்முறையைப் பெரிதும் போற்றி வருகின்றனர்.

இரண்டாவது முறையாகிய உள்ள நிலை ஆராய்ச்சி முறையில், நோயாளியோடு மருத்துவன் நெருங்கிப் பழகுகிறான்; தடையின்றியும் கூச்சமின்றியும் மனத்திலுள்ளதையெல்லாம் வெளியிடுமாறு தூண்டுகிறான்: நோயாளி கூறும் கதையையும், அவனது உள்ளக் கிளர்ச்சியையும் விருப்பு வெறுப்புகளையும், விவரமாக விழிப்பாகக் கூர்ந்து கவனிக்கிறான். நோயாளியின் உள்ளத்து மறைந்து வசிக்கும் மனச்சிக்கலை இவ்வழியால் கண்டறிந்ததும், மருத்துவன் தக்கதொரு புதுக் கருத்தையோ புது உண்மையையோ நோயாளியின் உள்ளததுப் புகட்டுகிறான். இதனால் நோயாளியின் மனநிலை இயல்பாகிவிடுகின்றது. கீழுள்ளத்தே நடைபெறும் போராட்டத்தாலும் ஏமாற்ற மெய்திய உணர்ச்சியாலும் மனநிலையும் நரப்புநலமும் குலையப்பெற்றார்க்கு இம்முறை பெரிதும் பயன்படுகிறது. தற்காலத்தில் பல மக்கள் தமது உணர்ச்சிகளையும் இச்சைகளையும் தவறான நெறிகளிற் செல்லவிடுகின்றனர்; அதற்குக் காரணங்களாவன: சூழ்நிலையும், விபரீத புத்தியும், குடும்பக் கட்டாயமும், ஸமூகக் கட்டுப்பாடும், உள்ளதை உள்ளவாறு உணர இயலாமையும் பிறவும். திடீரெனக் காலநிலைமை மாறுவதாலும், நண்பர்களை இழப்பதாலும், எதிர்பாராத வறுமையாலும், பிணிகளாலும் பலர் மன அமைதியை இழந்து, தமது வாழ்வில் அதிருப்தியடைந்து, அதனால் மனக் கலக்கம் அடைகின்றனர். இதன் விளைவாகத் தோன்றும் நரம்புப் பிணிகளை ஒழிக்க மனத்தில் சமநிலையை ஏற்படுத்தல் அவசியம; உள்ளத்தின் நிலையை ஆராயும் முறையால் அச்சமநிலை எளிதாக உண்டாக்கப்படுகிறது.

பிறருதவியை நாடாது ஒரு மனிதன் தன் மன நிலையைத்தானே ஆராயும் நோக்கத்தோடு, மனதை உண்முகமாகத் திருப்பித் தன் மனத்தையே ஊடுருவி நோக்கியும் தனது வாழ்க்கையில் நிகழ்ந்த செயல்களை ஆராய்ந்தும், தன் உள்ளத்து மறைந்து கிடக்கும் உணர்ச்சிகளையும் முடக்குகளையும் கண்டறிகின்றதும் உண்டு; கண்டறிந்தபின், தானே மன அமைதியை ஏற்படுத்த முயல்கிறான். ஒரு சிலரே இதனை இயற்றும் ஆற்றல் வாய்ந்தவராயினும், இம்முறை ஞான நெறிக்கு ஏற்றதாயும் ஆன்ற பயனைத் தர வல்லதாயும் உள்ளது. இம்முறையை யோக நூலார் பெரிதும் பயன்படுத்தி வருகின்றனர்.

உள்ளத்தின் கீழ்ப்பகுதியில் நிகழும் போராட்டத்தை ஒய்த்து மனத்தையும் நரம்புகளையும் நலம் பெறுமாறு செய்தற்கு, மன அமைதியைக் குலைக்கும் காரணங்களைப் பற்றிய அறிவுமட்டும் போதாது என்பர் சில உள்ளப்-பகுப்பு-நூல்-அறிஞர். தக்க முறையில் மனத்தைப் பழக்குதலும், ஞானப் பயிற்

சியைக் கைக்கொள்ளலும் வேண்டியனவாகும் என்பர் அன்னர் இந்துமத நூலார் இதனை ஒப்புக்கொள்கின்றனர். தன்மன நிலையைத் தானே உண்முக நோக்கால் ஆராய்தலை அவர்கள் போற்றுகின்றனர். ஞானசாதன முறைகளே மனதைப் பிளவுபடாது முழுமையாக்க உதவும் என்பது அவர்களது முடிபு. உள்ளத்தின் அடியிலே கரந்துறையும் நுண்ணிய சார்புகளை அறிவதோடு, ஒருவன் தனது வாழ்க்கையைத் திருத்தி அமைக்கவும் முயல வேண்டும். யோக நூலார் விதித்துள்ள 'ஏகாக்ர நிலை' அப்பியாசம் (மனதை ஒருமுகப்படுத்தப் பழகுதல், ஓர் உயர்ந்த இலக்ஷியத்தில் மனதை நிலைநிறுத்தல்) ஒன்றே மனதில் அடங்கிக் கிடக்கும் உயர்ந்த சக்திகளை மேலெழச் செய்து, அவற்றின் துணையால் மனத்தைச் சீர்படுத்தி முழுமையாக்கும். மனத்தை இச்சை ஒரு பக்கம் இழுக்க, அறிவு அப்பக்கம் செல்லுதல் தவறென்று எச்சரித்துத் தடுக்க, அறிவை மீற நினைக்கினும் இச்சையை நிறைவேற்ற வழியில்லாமையால் உள்ளம் ஏங்க, இவ்வாறு மனதிற்குள்ளே முரண்பாடும் போராட்டமும் உண்டாதலின் மனம் முழுமையாக ஒன்றில் ஈடுபடாது போகின்றது; மனம் இதனால் பல கூறுகளாகின்றது; அப்போது மனநிலையின் குலைவும் நரம்புகளின் கோளாறும் ஏற்படுகின்றன ஆகமன அமைதியைப் பாழ்படுத்தும் காரணத்தை அறிவதோடு, அதனை முழுமையாக்கி ஓர் உயர்ந்த வாழ்க்கையில் ஈடுபடுத்துதற்குரிய பயிற்சியும் இன்றியமையாததாகின்றது.

சுருங்கச் சொல்லின், ஞானநெறிப் பயிற்சியொன்றே மனத்திலுள்ள வெவ்வேறு பகுதிகளையும் ஒன்றுயிணைத்து, முரண்பாடுகளையும் போராட்டத்தையும் ஒழித்து, நிலையான சாந்தியை அளிக்கவல்லதாகும் என்பதே சிந்தித்தற்குரிய பேருண்மையாகும்.

மதத்தினைத் தள்ளக்கூடுமா?

(நியூயார்க்கில் உள்ள வேதாந்த நிலையம் ஒன்றைச்சார்ந்த ஸ்ரீமத்சுவாமி பவித்ராநந்தஜி அவர்கள் கல்கத்தாவில் 'ராமகிருஷ்ண மிஷன் பண்பாட்டு நிலைய'த்தில் சென்ற ஜனவரியிற் செய்த ஒரு பிரசங்கமும் கூட்டத் தலைவரின் குறிப்புகளும் — இரண்டின் சுருக்கமும்— ஆங்கிலப் பத்திரிகையிற் கண்டபடி, கீழே மொழிபெயர்த்துத் தரப்படுகின்றன —ஆசிரியர் ரா. வி.)

"மதத்தை (சமயத்தைத்) தள்ளக்கூடுமா?" என்ற கேள்விக்கு நான் நேர்விடையளிக்கிறேன். நமக்கு மதம் வேண்டாமாயின் அதைத் தள்ளிவிடக்கூடும். மதம் வேண்டும் என்ற அவா நம்மிடம் உதித்தபின்தான் நம்மால் அதைத் தள்ள முடியாது.

இருவகை மக்கள் எப்போதும் இருந்துள்ளனர். மதம் அவசியமற்றது என்றும் பயனற்றது என்றும் கருதுகிறவர் ஒருவகை; உலகத்திலுள்ள எல்லாத் தொந்தரவுக்கும் காரணம், மனிதனது மதத்தில் மனிதனுக்கு நம்பிக்கை இல்லாமையே என்பார் இரண்டாவது வகை, இக்கேள்வியும், மனிதன் பூமியில் உதித்த காலமுதலே இருந்துவரும் பழமையான ஒரு கேள்வியே யாகும். பண்டைய பாரத நாட்டிலும், ஆறு தரிசனங்களும் தலையெடுத்த காலத்தில் சார்வாகருடைய மதமும் இருந்தது; அது கூறியதாவது "வாழ்விலிருந்து மிகச் சிறந்த சுகத்தைப் பெற்றுக் கொள்க; அதற்காகக் கடன் வாங்க நேர்ந்தாலும் சரி, குற்றமில்லை!" இம்மாதிரியான இவ்விருவகை மக்கட்கும் உள்ள சண்டை எப்போதும் இருந்துள்ளது, இனி எப்போதும் இருந்தே வரும்.

இறைவனைப்பற்றியும் அறுதியான மெய்ப்பொருளைப்பற்றியும் இயல்பாகவே சாதாரணமாகவே நினைக்கும் திறமையைச் சில மக்கள் பெற்றுள்ளனர். மதச் சார்புடைமை ஒரு நோய்க்கு அறிகுறியென்றே, இயற்கையை விஞ்சிய நிகழ்ச்சி (இயற்கைக்கு அதியான தன்மை)யென்றே மற்றவர் கருதுகின்றனர். ஸ்ரீராமகிருஷ்ணரிடம் உயர்ந்த சமாதியனுபவங்கள் ஏற்பட்ட போது பல மக்கள் அவரைப் பைத்தியக்காரர் என்றே கருதினர். அப்பெரியார் அன்னர்க்குக் கூறிய பதிலாவது: "சிலர் எனது நிலைமையை ஒரு நோய் என்றுகூறுகின்றனர். 'எவருடைய சைதன்ய சக்தி இவ்வுலக முழுதையும் உணர்வுடையதாக ஆக்கியுள்ளதோ அவரை நினைப்பதனல் ஒருவன் எவ்வண்ணம் உணர்வை யிழப்பது இயலும் என்று யான் அவர்கட்குப் பதிலுரைக்கிறேன்." பக்தர்களின் சரித்திரங்களையும் ரிஷிகளின் சரித்திரங்களையும் வாசிப்பதிலிருந்து நாம் அறியும் ஓர் உண்

மையாவது, அவர்கள் தமது குழந்தைப் பருவ முதலே மதசம்பந்தமாகவும் மெய்ப் பொருள் சம்பந்தமாகவும் சிந்தனையுடையரானார் என்பதே. அவர்கள் வழக்கிற்கு இடமான வினாக்களைப் பற்றிக் கவலைப்படுவதே யில்லை. தமது வாழ்விலே மதத்தை அனுபூதக்கு விஷயமாக்குகின்றனர். மதம் இன்னது என்பதையே அவர்கள் அறியாமலும் இருக்கலாம்; ஆனால் மற்றவர் அவர்களுடைய வாழ்க்கைகளை ஆராய்ந்து கற்பதனால் மதம் இன்னது என்பதை அறிகின்றனர்.

உண்மைகளை எதிரே காண்போம்

மதசம்பந்தமான நினைவை வளர்ப்பதற்காக ஒருவன் பிறப்பு, மரணம், நோய், முதுமை இவற்றின் காரணங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். மரணம் என்பது வாழ்க்கையிலே மிக நிச்சயமான ஒரு நிகழ்ச்சியாகும். நாம் இவ்வுலகப் பற்றுடையவராகிறோமோ மறு உலகப் பற்றுடையவராகிறோமோ அது விஷயமன்று; நாம் உண்மைகட்கு நேராக எதிரே நிற்க வேண்டும். வாழ்க்கையிலுள்ள விறைப்பும், துன்பமும்—தனி வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும் தேசீய வாழ்க்கையிலும் உலகத்தாரது பரஸ்பர சம்பந்த வாழ்க்கையிலும் ஏற்பட்டுள்ள இவ்விரண்டும் மிக்க அளவினவாயிருத்தலின், மீண்டும் மீண்டும் சமநிலையை நாம் இழந்து விடுகிறோம். நமக்குள்ளே அசையாது நிலையாயுள்ள ஒன்றைக் கண்டுபிடித்து, அதன் மூலமாகச் சாந்தியையும் ஆறுதலையும் சௌக்கியத்தையும் பலத்தையும் பெறுவது மிக மிக அவசியமாகின்றது. மதத்தை நாடும் நான்கு வகை மக்களைக் கீதை எடுத்துக் காட்டுகின்றது; அவராவார் துயரப்படுவோரும், யாதேனும் பலமான இச்சையொன்றை நிறைவேற்ற வேண்டுவோரும், ஞான இச்சை அரும்பப் பெற்றவரும், மெய்ஞ்ஞானம் பெற்றவரும்.

மதமும் அரசியலும்

மதத்திற்கு மிகுதியான எதிர்ப்பு உண்டாவது அரசியலிலிருந்துதான்; ஆனால் இந்த எதிர்ப்பு, ரஷ்யாவில் நிகழ்வது போல மத நிலையங்கட்குப், அவற்றிற்குரிய சொத்து முதலிய உரிமைகட்கும் ஏற்படும் எதிர்ப்பே தான். மதநிலையம் என்பது ஒன்று, உண்மையான மதம் என்பது மற்றொன்று; அரசியல் மக்களின் வறுமையைத் தீர்க்க முயன்று நிலையங்களைச் சீர்திருத்தியமைத்தல் மூலமாக மக்கள் தாமாகவே சீர்திருந்துவதை நிச்சயப்படுத்துகிறது. ஆனால், அதற்கு மாறாக மதமோ மக்களைச் சீர்திருத்த முயன்று, அவர்களின் வாழ்க்கைகளின் பிம்பவடிவமாக நிலையங்கள் சீர்பெற்று விளங்கச் செய்கின்றது. இவ்விரண்டு வழிகளில் எது வெற்றி பெறுவதற்கு அதிக வாய்ப்புள்ளது? இரண்டு உலகப் போர்களை வாழ்க்கையிற் கண்ட நமக்கு விளங்குகின்ற உண்மையாவது, வெறும் அரசியல் மாற்றத்தால் உலகத் துன்பங்கட்கு ஒரு முடிவு ஏற்படுவதில்லையென்பதே.

அகண்டப் பொருளைப் பெறத் துடிப்பு

மதம் என்பது யாது? மக்களால் வகுக்கப்பட்ட ஓர் ஒழுங்கு முறையோ கொள்கையோ அன்று; அகண்டமான பரம்பொருளைப் பெற மனிதன் துடித்தலேயாகும். நமக்கு அற்பமான எல்லைக்குட்பட்ட பொருள்களில் திருப்தி உண்டாவதில்லை; நமது தேவைகட்கு எல்லையும் இல்லை. கட்டுப்பாடற்ற சுதந்திரத்தில் நமக்குள்ள அவாவையும், அகண்டமான பரம்பொருளை அடைவதிலுள்ள நமது ஆசையையும் இது குறிக்கிறது. அற்பமான சிறு பொருள்களில் ஆனந்தமில்லையென்றும், அகண்டமான பரம்பொருளில் மட்டுமே ஆனந்தமுண்டு என்றும் உபநிடதங்களில் நாம் வாசிக்கிறோம். அந்த அகண்ட பரம்பொருளை எல்லையற்ற நன்மை எல்லையற்ற பேரின்பம், எல்லையற்ற அறிவு, பூரணத்தன்மை வடிவாயுள்ள பொருளை— உணரும் வகையை மனிதனுக்குக் காட்டுவது மதமே.

ஆனால் அறுதியான மெய்ப்பொருள் என்பது தத்துவ ஆராய்ச்சியினால் விளையும் ஒரு தனிக்கருத்தன்று. மனித அறிவு வாயிலாகவோ மனித அன்பு வாயிலாகவோ நோக்கும் போது, அப்பரம்பொருள் மனிதவடிவையும் அணிந்து கொள்கிறது. மனிதன் மனிதனாக இருக்கும் வரை, பரம்பொருளைப்பற்றிய அவனது கருத்து மனித இயல்பை யொட்டியதாகத்தான் இருத்தல் வேண்டும்; ஆதலின் மதத்தைப் பின்பற்றுவோர் இறைவனைத் தந்தையாகவோ தாயாகவோ வேறொரு உறவினராகவோ கருதுகிறார்கள். அகண்டமான (எல்லையற்ற) பரம்பொருளை அடையும் அவா உள்ளடங்கியிருப்பினும், எல்லாரிடத்தும் இருப்பதொன்றே நம்மிடம் அது இருக்கும் வரை, நாம் அறிந்தோ அறியாமலோ மதத்தைப் பின்பற்றி வருபவராவோம். மதம் என்பது இயற்கையிலே ஏற்பட்ட ஒரு தேவையாகும். மனிதனது அகமுதிர்ச்சிக்கு அடிப்படையுமாகும்.

தலைவர் கூறியது: 'மதத்தைத் தள்ள முடியுமா?' என்ற கேள்விக்கு விடை, 'மதம்' என்பதற்கும், 'தள்ளல்' என்பதற்கும் நாம் கொள்ளும் பொருள்களைப் பொறுத்ததென்று நான் கருதுகிறேன். "தள்ளல் என்பதற்குப் 'பயனற்றதென வெளியேற்றுதல்' என்றும், 'பழக்கத்தைக் கைவிடல்' என்றும் பொருள் கொள்ளலாம். இவ்விரு பொருள்களையும் ஆதாரமாகக் கொண்டால், நமது கேள்வியை வேறிரண்டு கேள்விகளாகப் பிரிக்கலாம். மதத்தை உபயோகமற்றதென எறிந்துவிடலாமா? மத ஒழுக்கம் பழகி வருவதைக் கைவிட்டுவிடலாமா?—— இவை இரண்டு வினாக்கள். முதற் கேள்விக்குப் பதில் முன்னமே கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கேள்வியைப்பற்றிச் சொல்ல வேண்டியது ஒன்று உண்டு: மதம் கூறுகிறபடி பழகிவருதல் பயனற்றது என்பது மட்டுமல்ல, மனித வர்க்கத்தின் பரந்த நலன்கட்கு நேரே கெடுதியை விளைக்கக் கூடியதே என்று கருதுகின்றவர் உளர் என்பது.

மதம் என்பது யாது? மனித ஆன்மா அகண்டப் பொருளை அடைதற்காகத் துடித்தலே யாகும். இது உண்மையே. அதனை ஓர் இணையற்ற ஞான அனுபவம் என்றும், வேறுவகையான மனித அனுபவங்களினின்றும் அதைத் தெளிவாகவும் எளிதாகவும் பிரித்தறியலாம் என்றும் கூறலாகும். மனிதனைப்பற்றிய அறுதி உண்மையாவது ஆன்மா என்பதே. அகண்டத்தை அடையத் துடித்தலும், உண்மைப் பொருளைத் தேடுதலும், சாந்தியையும் ஆனந்தத்தையும் நாடுதலும்—இவையனைத்தும மனிதனது ஆன்ம இயல்பான ஒரே ஊற்றிலிருந்துதான் கிளம்புகின்றன.

மதக் கொள்கைகளும் சித்தாந்தங்களும் வடிவங்களேயாம்; இவ்வடிவங்களின் வாயிலாக ஒரு மதத்தைத் பின்பற்றுவோர் ஞான அனுபவத்திற்குத் தூலவடிவங் கொடுக்க முயலுகின்றனர். மதங்கட்குள் எழும் போராட்டங்கள் மதநிலையங்களையும் மதக் கொள்கைகளையும் வற்புறுத்துவதனால் எழும் போராட்டங்களேயாம்; அச் சண்டைகட்கு மூலம் மதத்தின் சாரமான பகுதியன்று. ஆதலால் 'மதம்' என்ற மொழியால், சித்தாந்தத்தையோ நிலையங்களையோ ஸமூகத்தையோ வற்புறுத்தும் மதம் என்று பொருள் கொண்டால், அதைத் தள்ளுவது முடியும் என்பது மட்டும் அன்று; அதைத் தள்ள வேண்டியது முற்றும் அவசியமுமாகும்.

பிரார்த்தனை செய்தல் முதலானவை மதத்தைப் பழகும் முறைகளாகும். இரண்டு காரணங்களால் பிரார்த்தனையைப் பழகாது நிறுத்திவிடலாம். ஒன்று, கடவுளைப்பற்றிய நினைவு எழுந்ததும், ஒருவனிடத்து மதசம்பந்தமான எல்லா உணர்ச்சிகளும் பாவனைகளும் உள்ளத்தினின்று தாமே கிளம்ப வேண்டும்; அப்போது பிரார்த்தனை வேண்டாம். இரண்டாவது, தத்துவ விசாரணையில் ஈடுபட்டு வரும்போது மனம் ஓர் உயர்ந்த நிலையினை அடையும்; அப்போது பிரார்த்தனையின் அவசியத்தைத் தாண்டிச் சென்று விடலாம்.

மதத்திற்கு வாழ்க்கையில் உண்மையான ஆதாரம் இல்லையே எனும் காரணத்தால் அதை மதிப்பற்றதெனக் கருதி ஒதுக்கி விடுவார் தற்கால விஞ்ஞான சாஸ்திர முறைக்கு இணங்க நடப்பதாக உரிமை பாராட்டிக் கொள்கின்றனர்; ஆனால் அவர்கள் அம்முறைக்கு மிக மாறாகவே ஒழுகுகின்றனர் என்பதே உண்மை; எவ்வாறெனில் அவர்கள் தங்களுடைய கொள்கைகட்கு எளிதாக ஒத்துவராத உண்மைகளைத் தள்ளிவிடுகிறார்கள்; இது விஞ்ஞானிகளது செயல் ஆகாதன்றோ? மனித வர்க்கத்திற்கே பெரும் ஞான குருக்களாக வருவாரது நேர்மையைப் பற்றிச் சந்தேகங் கொள்வது நம்முடைய அசட்டுத் துணிவேயாம்; அவர்களுடைய ஞான அனுபவங்களையும் உண்மையான நிகழ்ச்சிகளென்றே அவர்கள் அங்கீகரித்தல் வேண்டும்.

"தாய் தன்னிடம் பால் குடிக்கும் குழந்தையைப் பார்த்து, 'வா, மகனே, நான் உனது தாய்!' என்று கத்துகிறாள். குழந்தை அதற்குப் பதிலாக 'அம்மா, உன் பாலைச் சாப்பிடுவதால் எனக்குச் சுகம் வரும் என்பதை ருசுப்படுத்திக் காட்டு' என்று சொல்லுகிறதா?"

"உனது சாமர்த்தியத்தை விற்றுவிட்டு, மனக் கலக்கத்தை விலைக்கு வாங்கிக் கொள்; சாமர்த்தியம் வெறும் கருத்தேயாம், மனக் கலக்கம் மெய்க் காட்சியாகும்."

— ஜலால் உடீன் ரூமி
(பாரசீக நாட்டு ஞானியார்)

இன்பமாலை

(127-ம் பக்கத் தொடர்ச்சி)

8. போது(உ)லாவிய வேணி யானொடு
போதனுளணை மார்பனு
மாது(உ)லாவிய பூவி னனுமொர்
மாறிலாத முத்தொழில்
கோது ருதுநி லாவ வாழ்வது
கோண மீமிசை மேவிடுந்
தீது ருமறை யோது மாமயில்
சேவ டிப்பயனாகுமே.

(பொ-ரை) பூக்கள் பரந்த சடையையுடைய வனான சிவபெருமானும் செந்தாமரைமலரில் வீற்றிருக்குந் திருமகளை அணையும் மார்பை யுடையவனான திருமாலும் அழகுபொருந்திய (திருமாலின் உந்தித்) தாமரையில் தோன்றிய பிரமனும் [கலைகளை நாவில் உடைய பிரம னும்] ஒரு மாறுபாடு இல்லாத தம் அழித்தல் காத்தல், ஆக்கல் ஆகிய மூன்று தொழில்க ளும் குற்றம் பொருந்தாது விளங்கும்படி வாழ்வது, ஸ்ரீ சக்கரத்தின் மேலிடத்து விளங் கும் பீஜத்தினிடத்தே பொருந்தி வாழும், குற் றம் பொருந்தாத வேதங்களைச் சொல்லும் சிறந்த மயில் போன்றவளான தேவியின் அழகிய பாதங்களை வணங்குவதனால் வரும் பயன்கள் ஆகும்; எ-று.

[மாறிலாத தம் முத்தொழில் எனப்பிரிக்க. போது—மலர். வேணியான்—சடையுடையவன் (சிவன்). போதினள்—இலக்குமி. மாது-அழகு. பூவினன்—பிரமன். நிலாவ-விளங்க. கோணம்-ஸ்ரீ சக்கரம். மறை—வேதம்.]

9. எண்ணி லாதபல் தேவர் தம்பத
மென்று மோதிவ ணங்குவோர்
நண்ணி டாதமெ யின்ப மாநிலை
நண்ண லாகுமொர் தற்பரை
பண்ணிடாமிகு பொற்பு மேவுக
பாலி சூலிப ராபரை
விண்ணி லாவிடு ஞான மாமலர்
வீறு சேவடி கூறவே.

(பொ-ரை) ஒருவரால் இயற்றப்படாத, தனக்கு இணையாகச் செய்யப்படமாட்டாத மிகுந்த (இயற்கை) அழகு பொருந்திய கபா லியும், திரிசூலியும், பராபரையும் ஆகிய தேவி யின், பேரின்ப வெளியாகிய தடாகத்தில் விளங்கும் சிறந்த ஞானமாகிய மலரைப் போன்ற பெருமை பொருந்திய அழகிய பாதங்களைத்துதித்தால், எண்ணிக்கையில்லாத பல தேவர்களுடைய பாதங்களை எக்காலத் தும் வழுத்தி வணங்குபவர் அடையலாகாத மெய்மையான சிறந்த பேரின்ப நிலையாகிய வீடுபேற்று நிலையை ஒரு நொடிப் பொழுதி னும் குறுகிய காலத்தில் அடையலாகும்; எ-று.

[பதம்—பாதம். ஓதி—துதித்து. நண்ணிடாத— அடையாத. தற்பரை—ஒரு வினடியின் அறுபதில் ஓர் பகுதி. பண்..பொற்பு—இயற்கை அழகு. விண்—இதய ஆகாயம் (பரவெளி).]

10. கண்ணிணைக் கடைபாய வேமதி
கட்டழித்திடு மும்மல
நண்ணிடா வெனி லேடொ ராயிர
நாடு தாமரை மீமிசைப்
பெண்ணி னாரமு தன்ன சுந்தரி
பேசி டாநிலை பேலோளிர்
எண்ணி னுடனை யுள்ள மாமல
ரெண்ணு வார்பய னென்னவே.

(பொ-ரை) (தேவியின்) இரு கடைக்கண் களும் பாயும் அளவிலே, அறிவை உறுதி கெடுத்திடும் (நிலை குலைத்திடும்) ஆணவம், மாயை, கன்மம், என்னும் மூன்று மலங் களும் பொருந்தமாட்டா என்றால் ஆயிரம் இதழ்கள் பொருந்திய தாமரைமலரில் (சிரசில் சகசிரார) மத்தியில், அதற்கு அறிகுறியாகிய ஸ்ரீ சக்கிர பீஜத்தில் மேற்பட வீற்றிருக்கும் பெண்களில் அரிய அமுதத்தைப் போன்ற இனியவளும் அழகியும், பேசத்தகாத பேரின்ப நிலையில் (மௌன சமாதி நிலையில்) விளங்குபவளும் யாவருள்ளத்தும் உறைபவ ளும் (யாவராலும் கருதத்தக்கவளும் மதிக்கத் தக்கவளும்) ஆகிய அத்தேவியை தமது மன மாகிய சிறந்த மலரிடத்தில் வைத்து எண்ணு கின்றவர்கள் தியானிக்கின்றவர்கள் அடையும் பயன்கள் எப்படிப் பட்டவை களாம்? எ-று.

[கண் இணைக் கடை—இரு கடைக் கண்களும், ஏடு ஓராயிரம் நாடு தாமரை—சிரசில் உள்ள ஆயிர இதழ்க் கமலம் (ஸஹஸ்ராரம்; இதன் விரிவை எமது ஸ்ரீ சக்கரமகிமை யெனும் நூலிற் காண்க. மீமிசை—மேல். பெண்ணின் ஆர் அமுது அன்ன எனப்பிரிக்க. எண்ணினுள் தனை எனப்பிரிக்க.

11. ஆதி யந்தமி லாத மேலவ
ராவ ரென்றபல் தேவருந்
தீதி லாஅமு துண்ட வானவர்
செப்பு மெய்வர வாணரும்
மீதி லாததொர் கால மேவிட
வீவ ரான்மலை மங்கையாள்
ஏதி லாதவள் கால தத்துவ
மெட்டி டாதவொர் தெய்வமே.

(பொ-ரை) முதலும் முடிவும் இல்லாத மேலோர் ஆவர் என்று நூல்களாற் கூறப்

பட்ட பல தேவர்களும் குற்றம் இல்லாத அமுதத்தை உண்டு சாவாமையுடையவரான தேவர்களும் சொல்லப்படும் வரத்தால் என்றும் உடம்பில் வாழ்தலையுடைவர்களும் (சிரஞ்சீவிகளும்) தாம் வாழ்வதவதற்கென்று மேல்நிகழ்தல் இல்லாததொரு காலம் உண்டாகுங்கால் (பேரூழியில்) அழிவர்; மலையரசன் மகளாகிய தேவி (எத்தகைய) குற்றமும் இல்லாதவள்; கால தத்துவத்தால் எட்டத் தகாத ஒப்பற்ற தெய்வம் ஆவள்; எ-று

[ஏது—ஏதம் (குற்றம்), காரணமுமாம். காலம் தேவியிடத்து நின்றும் உண்டானமையால், அவள் காலத்தைக் கடந்தவள் என்பதாம். வீவர்—அழிவர்.]

12. அன்ன மாகியும் அன்னமேறியும்
ஆதி மாமறை யேனையோர்
சொன்ன தஞ்சுடர் கண்ணெ னப்பெறு
தூய மாதரு ளல்லவோ
பன்னரும் பொருள் கூறுமாமறை
பாத மேவுசி லப்பெனில்
என்ன வாறவை யொலித ராமுனம்
இன்பொருட்பய னோர்வதே

(பொ-ரை) அன்னப் பறவை வடிவெடுத்தும் அன்னப் பறவையை வாகனமாகக் கொண்டு ஏறியும் முறையே திருமாலும் பிரமனும் முதன்மைத்தாகிய சிறந்தவேதத்தைச் சொன்னதும் சந்திரன், சூரியன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் தனது கண்களாகக்கொண்ட (இயல்பாகவே) தூயவளான தேவியின் அருளினால் அல்லவோ? சொல்லுதற்குஅரியபொருளை (சொல்லப்படும் அருமபொருளாகிய செப்பொருட்டன்மையைக்) கூறுஞ்சிறந்த வேதம் தேவியின் பாதங்களில் பொருந்திய சிலம்பாம் என்றால், அவ் வேதச் சிலம்பு ஒலிப்பதற்கு முன் (தேவியின் இயக்கத்தால் அது ஒலிப்பதற்கு முன்) வேதத்தின் இனிய பொருளாகிய பயனை (திருமாலும் பிரமனும் ஆராய்ந்து அறிவது எத்தன்மையால் இயலும்? எ-று.

[மாது அருள் அல்லவோ எனப் பிரிக்க. பன்னரும்—சொல்லற்கரிய; சொல்லப்படும் அரிய (பொருள்). ஒலிதராமுனம்—ஒலிப்பதற்கு முன்பு.]

13. அண்ட முற்றவும் ஒவில் செய்கையி
லாய பண்பினி லார்வது
கொண்ட லும்பொரு வாத பேரருள்
கொண்ட கோதைநி லாவணி
மண்ட லம்பொரு வாமு கத்தியி
மண்ட லங்கதி சேரவே
விண்ட ருஞ்சிவ னோடு குஞ்சித
வேணடம்புரி காதலே

(பொ-ரை) உலகத்து உயிர்கள் முழுவதும் ஒழிவு இல்லாத செய்கையிற் பொருந்திய குணத்தில் [செய்கைகளிலும் பொருந்திய குணங்களிலும்] தோய்வது, மேகமும் ஒப்பாகாத மிகுந்த அருளைக் கொண்ட பெண்ணும் (அழகு, ஒளி முதலியவற்றால்) சந்திர மண்டலமும் ஒப்பாகாத முகத்தையுடையவளும் ஆகிய தேவி, இவ்வுலகம் உய்வு பெறும்படி தெய்வவுலக இன்பங்களைத் தந்தருள்கின்ற [ஞானாகாய வின்பத்தைத் தந்தருள்கின்ற சிதம்பரத்தே பொருந்தியிருக்கின்ற] சிவபெருமானோடு விருப்பத்தைத் தரும் கால் மடக்கியாடுகின்ற நடனத்தைச் செய்வதன் மேல் உள்ள விருப்பமேயாம்; எ-று

ஆர்வது—பொருந்துவது. ஓவு இல்—ஒழிவில்லாத. கொண்டல்-மேகம். பொருவாத-ஒப்பாகாத. பொருவா முகத்தி இம்மண்டலம் எனப் பிரிக்க. முகத்தி—முகத்தையுடையவள். கோதை—பெண். நிலா அணி மண்டலம்—சந்திரமண்டலம். இம்மண்டலம் — இவ்வுலகம். விண் தரும்—ஞான வெளியை உதவும்; விண்டு-வெளிப்பட்டு (அருஞ் சிவன்) என்றுமாம். குஞ்சித வேள் நடம்எனப் பிரிக்க. வேள்—விருப்பம். குஞ்சித நடம்—கால் தூக்கியாடும் நடனம்.

14. உரைத ரும்புகழ் பகுதி யாயினும்
உடல்பெ றாவிடின் விடையவன்
வரைத ருஞ்செய லெதுபு ரிந்திட
வலிமை சேர்குவ னுலகிலே
புரைய றும்படி விபுத ராள்வது
புவன சுந்தரி யருளிடும்
வரைய றுவிழி யுதவு புண்ணிய
வரம லாதிலை சரதமே.

(பொ-ரை) சொல்லப்படும் புகழையுடைய விடையூர்தியாகிய சிவபெருமான், தேவியைத் தன் உடம்பில் பகுதியளவாக வாயினும் பெற்றுக் கொள்ளாவிடில், அவன் உலகில் வரையறுக்கப்பட்ட எச்செய்கையைச் செய்ய வல்லமை அடைவன்? தேவர்கள் குற்றம் நீங்கும்படி தம் முலகங்களை ஆட்சி புரிவதும் உலக சுந்தரி (உலகில் எல்லாப் பொருள்களினும் மிக்க அழகுடையவள்) ஆகிய தேவி அருள் செய்யும் திருவிழிகள் உதவுகின்ற எல்லையற்ற புண்ணிய வரத்தால் அல்லாமல் வேறு ஒன்றால் அல்ல, இது உண்மையே; எ-று.

[வரைதரும்—சொல்லப்படும். விடையவன்—ரிஷப வாகனன், சிவன். வரைதரும்—தனக்கென அறுதி செய்யப்பட்ட. புரை—குற்றம். விபுதர்—தேவர். சரதம்-உண்மை, உரைதரும் புகழ் விடையவன் எனச் சேர்க்க.]

15. மலையின் மாமக னெனவு தித்தனண்
மருவ நின்றன ளரவமுந்
தலையின் மேவிய வனச முற்றனள்
தகுதி யோடிவை தெரிதரின்
மலைவி லாதுள மகிழ மூவரு
மாபு றத்தனி புரி தொழில்
சிலைவி லார்கர மதும லர்க்கணை
திகழ்த ருஞ்சிவை தொழில்களே.

(பொ-ரை) (தேவி) மலை யரசனுக்குச் சிறந்த மகள் என்னும்படித் தோன்றினாள்; அரவங்களும் (அணிகளாகப்) பொருந்த நிலை பெற்றாள்; சிரத்தின் கண் பொருந்திய ஆயிரவிதழ்த் தாமரையில் பொருந்தி இருந்த னள்; இவற்றைத்தகுதியுடன் ஆராய்ந்தால் முத்தேவர்களும் மனம் மகிழும்படி (ஒரு) மாறுபாடு இல்லாமல் முறை பொருந்தத் தனித்தனி செய்கின்ற முத்தொழில்களும், தன் கையினிடத்து மேருமலையாகிய வில்லும் தேனையுடைய பூங்கணைகளும் விளங்குகின்ற அத்தேவியின் தொழில்களேயாம்; எ-று.

['மலையின்......வனசமுற்றனள்' என்பதனால், மும்மூர்த்திகள் தங்கும் இடங்கள் தேவிக்கு உரிமைப்பட்டவை என்பது விளங்கும்.

[மருவ—பொருந்த. தலையின் மேவிய, வனசம்—ஆயிர இதழ்த்தாமரை; மூவர்—பிரம்மா, விஷ்னு சிவன். சிலைவில்-மேரு மலையாகிய வில். கரம்—கை. கணை—அம்பு.]

16. அலக றப்புனை தருபல் தத்துவ
மகல நின்றவ ளகமுறும்
பலவ கைப்படு கமல கோணவை
பரிச மற்றிட விரசுவாள்
நிலவு கன்மமு நிகரின் ஞானமு
நிலைபிடத்தகு நிலைபெரு
இலகு முக்கனி யிருப தங்களை
யெளிதி னெண்ணிட வருளுமே.

(பொ-ரை) (தேவி) அளவில்லாதனவாகச் சொல்லப் படுகின்ற பல தத்துவங்களையுங் கடந்துநின்றவள்; உடம்பினகத்தே பொருந்திய [மறை பொருண்மையையுடைய) பல வகைப்பட்ட தாமரைகளையுடைய ஆறு ஆதார கோணங்களின் தோய்வின்றி அவை கடந்துவிளங்குவாள்; விளங்கிய கன்மமும் ஒப்பற்ற ஞானமும் அவளை நிலையிட்டு அறியத் தக்க தன்மையை அடையமாட்டா. ஆயினும், விளங்குகின்ற மூன்று கண்களையுடைய தேவியின் இரு பாதங்களையும் கருதுவதனால் (தியானிப்பதனால்) அவள் எளிதில் அருள் செய்வாள்; எ-று.

[அலகு அற—அளவு இல்லாது. புனைதரு—சொல்லப்படுகின்ற. அகல—நீங்க. உறும்—பொருந்திய. கமல கோண்—ஆறு ஆதாரங்கள். பரிசம்-தொடுதல். முக்கனி—முக்கண்ணி, தேவி. ஆதாரவிவரங்களை எமது 'ஆதார மாலை' என்னும் நூலிற் காண்க]

அகநோக்கு அளிக்கும் அறமொழிகள்

E. V. சோமசுந்தரம், B. A.

இறைவனுக்காகத் துயரத்தை ஏற்பார் ஒரு சிலரே

அத்யாயம் - 11

அவதார புருடரது விண்ணுலகை விரும்புவோர் பலர் உளர்; ஆனால் அவர்க்காகத் துயருறுவார் சிலரே.

மாபுருடரது ஆறுதலை விரும்புவோர் மிகப் பலர் உளர்; ஆனால் அவர்க்காகத் தெய்விக சோதனைக்குட்பட விரும்புவோர் சிலரே.

அவதார புருடரது அருள் விருந்திலே தாமும் பங்கு கொள்வோர் பலர் உளர். ஆனால் அவர்க்காகத் தாம் விரும்பிய உணவுகளையும் பானங்களையும் துறப்பார் சிலரே.

அவதார புருடரோடு கூடி இன்பம் துய்க்க விழைவார் பலர். ஆனால் அவருக்காகவோ அவருடனே கூடிப் பொறுமையுடனும் சகிப்புடனும் வாழ முயல்வோர் சிலர்.

அவதார புருடரிடமிருந்து சுகமும் சொத்தும் பெறும் வரை அவரைப் பின்பற்றுவார் பலர்; அவரோடு துயரத்தை அவர்க்காக ஏற்கத் துணிந்து பின் வருவோர் சிலரே.

அவதார புருடர் செய்யும் அற்புதங்கட்காக அவர்க்குப் பணிந்தொழுகுவார் பலர்; ஆனால் அவர் தமக்கு வரும் சோதனைகளால் அவமானப்படும் போதும் பின்பற்றுவார் சிலரே.

தமக்கு எவ்விதத் தொந்தரவுகளும் வராத வரையிலும் அம் மாபுருடரை நேசித்து வருவார் பலர்.

அப் புருடரிடமிருந்து தமக்குத் தேறுதலும், ஆதரவும் கிடைக்கும் வரை அவரைப் போற்றி வாழ்த்துவோர் பலர்.

ஆனால் அவர் தாமே ஒளிந்து கொண்டு சிறிது நேரம் மட்டும் தம்மை விட்டுப்பிரிந்து விட்டால் குறை கூறத் தொடங்குவர்; அன்றேல் அளவுக்கு மிஞ்சிய மனச் சோர்வுக்கு ஆளாகின்றனர்.

2. ஆனால் அம்மாபுருடர் மீது அவர்க்காகவே அன்பு செய்வோர், தமக்கெனப் பெறும் சுகத்திற்காக அவரை நாடாதார், தமக்கு வரும் சோதனைகளிலும் துயரங்களிலும், மிக்க ஆறுதலைப் பெறும்போது ஒழுகுவது போல, அவரை வாயார வாழ்த்துவார்.

அம்மட்டோ! அம் மாபுருடர் தமக்குத் தேறுதல் அளிக்கப் பிரியப்படாத போதும் அவரை எப்போதும் பரவுவார். சதா நன்றி செலுத்திக் கொண்டு இருக்கவே விரும்புவார்.

3. ஆஹா! அம் மாபுருடரது அன்பை, தன் மீது பற்றோ சுய நலனோ அற்ற அத் தூய அன்பின் வலிமையை என்னென்பது!

எப்போதும் ஆறுதலையே அம் மாபுருடரிடமிருந்து எதிர் பார்த்துக் கொண்டிருப்பவரை இலாபத்திற் கண்ணுயிருக்கும் வியாபாரிகளென்று கூற வேண்டுமன்றோ?

தமது நலனையும் ஊதியத்தையுமே எப்போதும் கருதி வருதலின், அன்னர் அம்மாபுருடர் மீதுள்ள பற்றினும் மிகுதியாகத் தம்மிடம் பற்றுள்ளவர் என்பதைக் காட்டுகின்றனர் அன்றோ?

ஒன்றையுமே எதிர்பாராமல் இறை பணி ஆற்ற விரும்பும் ஒருவரை எங்கு காண்பது?

4. உலகப் பொருள்கள் அனைத்தின் மேலும் ஆசைவிட்ட அவாவற்ற தூயோனைக் காண்பது மிக மிக அரிது

உண்மையாகவே அடக்கம் நிறைந்த அறவாளன் எங்கே? உலகப் பிராணிகள் பக்கள் அனைவர் மேலும் பற்றுதல் அற்ற பெரியோன் எங்கே? ஆ! அத்தகைய சான்றோன் பெருமை உலகத்தை விடப் பெரியது.

(i) தன் பொருள் அனைத்தையும் ஒருவன் தானம் செய்து விடுவானாயினும், அது அற்பமே யாம்.

(ii) தனது தீய நீர்மைக்காக வருந்தித் தூய்மைக்காகக் கடுந்தவம் புரியினும் அதுவும் சிறிதே யாம்.

(iii) அவன் எல்லா அறிவையும் பெற்றவனாயினும், அவன் இறைவற்கு வெகு தொலையில் இருப்பவனே யாவான்.

(iv) மிக உயர்ந்த நற்குண சம்பன்னனாயும், மிக்க ஆர்வம் நிறைந்த பக்தியானாக இருந்தாலும், இன்னும் பெருங்குறை அவனிடம் உண்டு; அது மிக முக்கியமானது ஒன்று! அது அவனுக்கு மிகத் தேவையான ஒன்று.

அது என்ன? அனைத்தையும் துறந்துவிட்டு, தன்னையே கைவிட்டு, தன்னை விட்டு அப்பாற் சென்று, தன்னபிமானத்தினால் ஒன்றையும் வைத்துக் கொள்ளாமையாகும்.

செய்தற்குரிய அனைத்தையும் தனக்குத் தெரிந்த முழு அளவுக்கும் செய்த பின்பும், தான் ஒன்றுமே செய்யாதவன் என்று கருதுவானாக.

5. மேலாக மதிக்கப் படக்கூடிய அதையும் பெரிதாக அவன் கருதாமல் இருக்கட்டும். உண்மையிலேயே, மனப்பூர்வமாகத் தான் ஒரு பயனற்ற அடிமை எனத் தீர்ப்புச் செய்து கொள்ளட்டும். ஏனெனில் உண்மையே வடிவான பெரியார் "செய்யும்படி உத்தரவிடப்பட்ட எல்லாவற்றையும் செய்த பிறகும், நாம் இறைவனுக்குப் பயனற்ற ஊழியர்கள் எனக்கூறிக் கொள்ளுங்கள்" என்றே உரைத்துள்ளனர்.

அப்போது தான் உண்மையில் தூய ஆன்மாவாகவும் அடக்கமே உருவாகவும் ஒருவன் இருக்க முடியும். அந் நிலையில் தான் ஒரு மாபுருடர் கூறுவது போல், 'நான் வறியன் தனியன்' என்று ஒருவன் கூறிக்கொள்ள முடியும்.

ஆனால் அவருக்கு மேல் எம் மனிதனும் செல்வம் படைத்தவன் அல்ல; அவரை விட அதிகாரமும் ஆற்றலும் நிறைந்தவன் எவனும் இல்லை; அவரைவிடச் சுதந்திர புருஷன் எவனும் கிடையாது ஏனெனில் அச்சீரிய சான்றோன் தன்னையே துறந்து விடவும், அனைத்திலிருந்தும் விடுபட்டுப், அனைத்திற்கும் கீழாகத் தன்னை மதித்திருக்கும் பணிவுடையோனாகவும் வல்லவனாவான்.

இந்துமத ஸாரம்

(128-ம் பக்கத் தொடர்ச்சி)

தூல உடலை ஜீவன் தனது கருமங்கட்கும், முற்பிறவிகளிற் பெற்றுள்ள அறிவின் தொகுதிக்கும் ஏற்றவாறு அமைத்துக்கொள்கிறான்; இதுபற்றியே அது, காரணம் (கருவி) எனப்படும் தூல உடலினும் வேறான காரியம் (பயன்) எனப்படுகிறது. இவ்விரண்டின் சேர்க்கையே 'காரிய காரண சங்கதம்' என்று உரைக்கப்படுகின்றது. ஆயினும், உடலைக் கட்டுதற்குப் பயன்படுத்தப்படும் முக்கிய கருவியாவது பிராணனே (உயிர்ச் சக்தியே); இப்பிராணன், வெவ்வேறு தொழில்களை இயற்றுதலினால் ஐந்தெனச் சாதாரணமாகக் கணக்கிடப்படினும், உண்மையில் ஒன்றேயாம். முற்பிறவிகளிலே உள்ளத்திலே தொகுத்து வைக்கப்பட்டுள்ள ஸம்ஸ்காரங்கட்குத் (பதிவுகட்குத்) தக்கவாறு ஜீவன் பிராணனை ஆட்டிவைத்து வருகிறது. தூல உடலை ஆக்குதற்கு வேண்டிய பொருள்கள், ஜீவன் அச்சமயம் எந்த உலகிற்குச் சொந்தமோ அவ்வுலகினின்றும் உணவின் மூலமாகச் சேகரிக்கப்படுகின்றன. இத்தூல சட உடலின் மூலமாகவும் அதன் உறுப்புகள் மூலமாகவும் ஜீவன் சடப்பிரபஞ்சத்தோடு சம்பந்தப்பட்டு, அதன் மீது செயல் புரிந்து அதன் செயலுக்கு எதிர்வினையையும் இயற்றுகிறது.

ஜீவனுக்கு உறைகளாக அமையும் இம்மூன்று வெவ்வேறான உடல்களும் உணர்வற்றன (அறிவற்றன), ஜீவன்மட்டும் அறிவுடையது. தனியாக இயங்கும் சோதி வீசும் அகண்டப் பொருளென அதனைச் சாஸ்திரங்கள் குறிக்கின்றன. (ஒப்பிடுக: பிருஹ- உபநி. 4-3-11). பூதங்களையும் பௌதிகங்களையும் போல அது படைக்கப்பட்ட ஒரு பொருளன்று. இறைவனே ஓர் உயிரின் ஜீவனாகத் தோன்றுகிறான். சாஸ்திரங்கள் நமக்கு அறிவிப்பதாவது: "இப்பிரபஞ்சத்தில் இருப்பது எது எதுவோ, அவையனைத்தையும் அவர் படைத்துள்ளார். படைத்துவிட்டு, அவர் உண்மையாகவே அதற்குட் புகுந்தார்" (தைத்தி-உபநி. 2-6-17). பெரியனவும் சிறியனவுமான, எல்லாப் பிராணிகளின் காரண சூக்கும தூல உடல்களையும் படைத்தபின் ஈசுவரர் அவையனைத்திற்குள்ளும் அவற்றின் ஆன்மாவாக (ஜீவனாக)ப் புகுந்தனரெனச் சொல்லப்படுகின்றது. கீதையிலே பகவான் "ஜீவ லோகத்திலே எப்போதுமுள்ள எனது அம்சமே ஜீவனாகத் தோன்றியுள்ளது" என்கிறார் (கீதை 15-7). இக்காரணம் பற்றியே ஜீவாத்மா (ஜீவன்) பிறப்பற்றது, இறப்பற்றது, அழியாதது என்றும் பிறவும் கூறப்படுகின்றது (ஒப்பிடுக: கட உபநி. 1-2-18). ஜீவான்மா உண்மையாகவே பரமான்மாவாகும், அதனின்றும் வேறன்று. "பிறப்பிற்கோ, தேய்விற்கோ, மரணத்திற்கோ உட்படாத இப்பெரிய ஆன்மா உண்மையாகவே, எவ்வித பயங்களுமற்ற அழிவற்ற பிரம்மமே யாம்" (பிருஹ. உபநி. 4-4-25).

சாஸ்திரங்களிற் காணப்படும் இம்மாதிரியான உரைகள் அனைத்திலுமிருந்து விசிஷ்டாத்வைத வேதாந்தம் நிலைநாட்டும் முடிவாவது: ஆன்மா பகவானின் மெய்யான சாஸ்வதமான தனியான ஒரு கூறு (அம்சம்) போன்றது என்பது. ஒரு பொறி நெருப்புக்கு எப்படியோ, அதே சம்பந்தமுடையது ஜீவன் ஈசனுக்கு; அது தன்னியல்பால் தெய்வமயமானது; எல்லாம் அறிந்த, எல்லாம்வல்ல, எங்கும் உள்ள இறைவனின் அணுவனைய கூறேயாம் அது. தீச் செயல்களின் பயனாக, அது மாசுற்றதாகிறது; அப்போது அது சுருங்குவதாகக் கூறப்படும். அதன் தெய்வமயத்தன்மை சிறிது பொழுதிற்கு அடக்கி வைக்கப்படுகிறது. ஆனால் அது தக்க ஞான சாதனப் பழக்கத்தால் படிப்படியாக விரிவடைந்து, தனது தெய்வமயத் தன்மையை முற்றிலும் வெளிப்படுத்துகிறது. பின்னர் கட்டு நீங்கி, பகவானது முன்னிலையிலும் அவரோடும் யாண்டும் இன்பந் துய்த்துக் கொண்டிருக்கிறது. ஆன்மாவைப் பற்றியும் அதன் பந்த நிலை முக்தி நிலைகளையும் பற்றிப் பக்தி சித்தாந்தத்தினர் கொள்ளும் கருத்து ஏறக்குறைய இதுவே.

ஆனால் அத்வைத வேதாந்திகளோ வேறுபட்ட ஒரு கருத்துடையராவார். ஒரு தனி மனிதனின் ஜீவன் பரப்பிரம்மத்தினின் அம்சயாகத் தோன்றினும், "எவ்விதப் பயங்களும் நீங்கிய, எங்கும் நிறைந்த அழிவற்ற பிரம்மனே" யன்றி வேறில்லை என்பர். ஜீவனும் பிரம்மனும் ஒன்றே என்ற ஐக்கிய உண்மையை எல்லா உபநிடதங்களும் போதிக்கின்றன. ஆத்மாவின் உண்மையான இயல்பை அறிவதனால் ஒருவன் முத்தியெய்துகிறான் என்பதன் காரணம் இதுவே. ஜீவன் அவித்தையின் (அறியாமையின்) வசப்பட்டு ஈசனின்றும் மற்ற பிரபஞ்சத்தினின்றும் வேறுபட்ட ஓர் அற்ப தனி மனிதனாகத் தன்னைக் கருதும்வரை, அது கட்டுப்பட்டே

இருக்கின்றது. தகுந்த ஞான சாதனப் பழக்கத்தால் அது பரமாத்மாவினின்றும் வேறுபடாத ஒன்ருகத் தன்னை உணருமாயின், அப்போதுதான் அது ஸம்ஸாரத்தினின்றும் (பிறவிக் கடலினின்றும்) விடுபட்ட நிலையினை அடைகிறது. இதனல் சாஸ்திரங்கள் விதிக்கும் கட்டளையாவது: "ஆத்மாவைத் தரிசிக்க வேண்டும்; அதைப்பற்றிக் கேட்கவும் சிந்திக்கவும் தெளியவும் வேண்டும்", (பிருஹ. உபநி. 2-4-5).

அகண்ட சச்சிதாநந்தக் கடலாக எங்கரும் இருக்கும் ஒரே பொருளான பரப்பிரம்மத்தினின்றும் வேருனதன்று ஆன்மா. அவ்வியக்கத்தினின்றும் தொடங்கிக் கீழேயுள்ள அனைத்துப் பொருள்களும் வியாவகாரிக நிலையிலே மட்டும் உள்ளனவாகும். அவித்தையின் வசமாக இருக்குமளவும் மட்டும் அவை உள்ளன. ஆத்ம ஞானம் உதயமானதும், அவை கனவைப் போன்று மறைகின்றன. அவை உள்ளனவாகக் காணப்படும் அளவும் தூலமும் சூக்குமமுமான, சடக்கருவித் திரைகளின் எண்ணிறந்த ஒரு வரிசையாக மட்டும் அவை தொழிற்படுகின்றன; இத்திரைகளின் வழியாக நோக்கும்போது ஒரே பரமாத்மா கணக்கற்ற தனித்தனி ஜீவர்களாகத் தோற்றமளிக்கின்றது. ஒவ்வொரு திரையும் அதன தன் அமைப்புக்குத் தக்கவாறு, ஒரே எல்லையற்ற உருவமற்ற மெய்ப்பொருளைப் பற்றி ஒரு வரையறையுற்ற தனி நிறங்கொண்ட காட்சியை அளிக்கின்றது. இக்காரணம்பற்றியே இத்திரைகள் 'உபாதிகள்' எனப் படுகின்றன.

(காரணம் எனப்படும்) அவ்வியக்தம் முழுதும் உபாதியாக அமைய அதன் வழியாக நோக்கும்போது, பரப்பிரம்மம், ஆக்கல் அளித்தல் அழித்தல் எனும் முத்தொழில்களையும் இயற்றும், எல்லாம் அறிந்த எல்லாம் வல்ல, ஈசனுகக் காட்சியளிக்கின்றது. ஈசனது சங்கற்பமும் கட்டளையும் பிறந்ததும், அவ்வியக்தம் தன்னுள்ளே பிரளய காலத்து உருக்கரந்த நிலையில் இருந்த சூக்கும உபாதிகளை வெளிப்படுத்துகின்றது; அவை வாயிலாக ஈசுவரரே வெவ்வேறு ஜீவர்களாகத் தோன்றுகிறுர்.

ஸமஷ்டி புத்தி (உலகத்தாருடைய மொத்த புத்தி) யென்னும் உபாதி (திரை) வழியாக நோக்குங்கால், அவர் இரணிய கருப்பராகத் தோன்றுகிறுர்; வியஷ்டி புத்தி (தனி மனிதனது புத்தி) யென்னும் உபாதி வழியாக நோக்குங்கால் அவர் வேறெந்த ஜீவனுகவும் தோன்றுகிறுர். ஒரே சூரியனைப் பலவித வண்ணங்களை யுடைய வெவ்வேறு கண்ணுடித் துண்டுகளின் வழியாகப் பார்க்கும் போது பலவாகத் தோன்றுவதுபோலவே, ஒரே ஈசர் தனித்தனி புத்தி யென்னும் வெவ்வேறு திரைகள் வழியாக நோக்குங்கால் எண்ணிறந்த தனித்தனி ஜீவர்களாகத் தோன்றுகிறுர்.

புத்தியென்பது ஞானத்திற்கும் கருமத்திற்கும் உரிய மிக நுண்ணிய சடக் கருவியாகும். அது சூக்கும சரீரத்திலுள்ள விஞ்ஞான மய கோசத்தில் உறைகின்றது; அக்கோசம் இருதயப் பிரதேசத்தில் அமைக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது; ஒரு முதியோனது கட்டைவிரல் பருமன் பெற்றிருப்பதாகவும், தோற்றத்தில் தூல உடலைப் போன்றிருப்பதாகவும் அறிவிக்கப் படுகிறது.

புத்தி தன்னளவிலே அறிவற்றதாயினும், எங்கும் பரந்த ஈசுவர அறிவால் (சைதன்யத்தால்) விளக்கம் பெறும் இயல்பை யுடையது. சூரியனல் ஒளியுடையதாக (விளங்கும்படி) ஆக்கப்படும் சந்திரன் தானே ஒளிரும் பொருளெனத் தோன்றுவதுபோல, புத்தியும் எங்கும் பரந்த ஈசுவர அறிவொளியின் பரிசத்தால் தனக்கென அஹங்காரம் கொண்ட தனிப்பட்ட அறிவுடைய ஜீவனுகத் தோன்றுகிறது. அறிவுக்கு மூலம் ஈசனையன்றி வேறென்றில்லை. புத்தி வேறென்றினின்றும் பெற்ற அறிவால் ஒளிர்கின்றது. அது ஈசுவரனைப் பிரதிபலிப்பதால் உண்டாகும் ஒரு பிரதிபிம்பத்தைப் பற்றிக்கொள்கிறது என்னலாம்.

ஒரு பிரதிபிம்பம் என்பது, ஒளி ஒரு பொருளின்மீது பட்டு மீள்வதால் உண்டாக்கப் படும் ஒரு பொய்த்தோற்றமேயாம். ஒளியை வீசும் மூலப் பொருளினைப் போன்ற ஓர் உருவம் பிரதிபலிக்கும் பொருளுக்குள்ளே காணப்படுகின்றது; இதுவே பிரதிபிம்பம் எனப்படுகின்றது. உதாரணமாக, ஒரு நீர்ப் பரப்பு சூரியனின் கதிர்களைப் பிரதிபலிக்கிறது; அதாவது அக்கதிர்கள் செல்லும் திசையை மாற்றிவிடுகின்றது. இதனல் அக்கதிர்கள் நீருக்குண்ணின்றும் நேரே வெளி வருவதான தோற்றம் ஏற்படுகின்றது. அந் நீர்ப் பரப்புக்குள்ளே அதே திசையிலே சூரியனைப் போன்ற ஓர் உருவத்தை நாம் காண்கிறேம். சூரியனைப் போன்ற இப் பொய் யுருவமே அதன் பிரதி பிம்பம் எனப் பெயர் பெறுகின்றது. புத்தியில் தோன்றும் ஈசனது உருவம் அம்மாதிரியான ஒரு பொய்த்தோற்றமே யாகும்.

பிரம்மம் என்பது எங்கும் பரந்துள்ளதும், எப்போதும் ஒரு படித்தாயுள்ளதும் சற்றும் மாருததும் ஆன சைதன்யமே. முற்றிலும் அறிவற்றதாயுள்ள புத்தி பிரம்ம சைதன்யத்தின் ஒரு பகுதியைப் பிரதி பலிக்கின்றது போல் உள்ளது. இதனுல் உண்டாக்கப்படுவது ஒரு பொய்க் கருத்தே; புத்திக்குள்ளே ஒரு தனியான மிகச் சிறிய சைதன்ய மூலம் இருப்பதான ஒரு தோற்றமே. புத்தியிலுள்ள அப் பொய்யான மிகச் சிறிய சைதன்ய மூலமே ஈசனின் பிரதிபிம்பம் எனப்படுகிறது. உண்மை யாதெனில், சாஸ்திரங்கள் அதனை அணுப்போன்ற பருமனை யுடையது என அறிவிக்கின்றன. (ஏஷோ அணுர் ஆத்மா—முண்ட. உபநி. 3-1-9). அகண்டமான ஈசுவரர் தம்மை எண்ணிறந்த அணுவ வனைய ஆன்மாக்களாகக் துண்டித்துக் கொண்டு, ஒவ்வொரு ஜீவனின் நுண்ணிய விஞ்ஞானமய கோசத்துக்குள்ளேயும் தனித் தனியாய்த் தாம் புகுந்திருக்கிருர் என்பது மெய்யன்று. ஒரே சூரியன் பற்பல நீர்ப் பரப்புகளின் மீது பிரகாசிக்கும்போது உண்டாகும் பல பிம்பங்களினுல் பல சூரியர்களாகத் தோற்றமளிப்பது போன்றே, ஈசுவரரும் வெவ்வேருன (வியஷ்டி புத்தி) தனித்தனிப் புத்திகளின் வழியாகப் பார்க்கப்படும்போது அத்தனை சிறிய வெவ்வேருன ஆன்மாக்களாகத் தோற்றமளிக்கிருர்.

புத்தி வெளியே யிருந்து பெற்ற இச் சைதன்யமாகிய ஈசவர பிரதிபிம்பமே ஒரு ஜீவனின் அமைப்பிலுள்ள ஒரே அறிவுத் தத்துவமாகும். அதுவே ஜீவாத்மன், ஜீவன் எனப்படும். ஒரு ஜீவனின் ஆணவத்தால் நேரே குறிக்கப்படுவது இந்த ஈசுவர பிரதிபிம்பமே, 'நான்' என்னும்போது ஒரு மனிதன் இதையை குறிக்கிருன். "எந்த அகண்டமான ஏகப்பொருள் புத்தியோடு தன்னை ஒன்றுபடுத்திக் கொண்டு, இந்திரியங்கட்கு நடுவே சுயஞ் சோதிப் பொருளாய் நெஞ்சிற்குள்ளே வாழ்கின்றதோ" அந்த ஆன்மாவே இது. (பிருஹ. உபநி. 4-3-7). ஒரு ஜீவனின் அமைப்பிலே, புத்தியிலிருந்து அதற்குப் புறத்தேயுள்ள ஏனைய பொருள்கள் யாவும் அதன் கருவிகளே. அவை தம்மளவிலே அறிவற்றனவாகும். அவை அறிவுடைய பொருள்களாகத் தோன்றுவதன் காரணம், ஆன்மாவை அவை தொட்டுக் கொண்டிருத்தலேயாம். நெருப்பிலே யிடப்படும் ஓர் இரும்புத் துண்டு செந்தழலாகிச் சூட்டையும் ஒளியையும் வீசத் தொடங்கும்போது நெருப்பைப் போன்று தோற்றமளிக்கின்றது; அதுபோல், புத்தியும் மனமும் இந்திரியங்களும் தூல உடலும் ஜீவான்மாவைத் தொட்டுக் கொண்டிருத்தலின், அறிவுடைய பொருள்களைப் போலத் தோன்றுகின்றன.

கருவிகளை இவ்வாறு ஜீவான்மா தனது ஒளியால் விளங்கச் செய்யும்போது, அவை தொழிற்படத் தொடங்குகின்றன. புத்தி அந்தக் கரணங்கட்குள்ளே மிக நுண்ணிய தாதலின், எங்கும் பரவும் ஈசுவர சைதன்யத்தால், அதுவே முதன்முதலாக விளக்கம் பெறுகின்றது. இதுபற்றியே அது ஈசுவர பிம்பத்தைத் தன்னுள்ளே வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது. எனினும் இவ்வாறு விளக்கம் பெற்றதும் அது கருத்தாவாகவும் போக்தாவாகவும் வேலை செய்யத் தொடங்குகிறது. ஆனுல், பொய்த் தோற்றத்தால் சைதன்யமே புத்தியாற் பிரதிபலிக்கப்பட்ட நிலையிலே இவ்வாறு தொழிலியற்றுவதாகத் தோன்றுகிறது. சூரியன் அசையாதிருந்தும் ஒரு நீர்ப் பரப்பிற்குள் தோன்றும் அதன் பிரதிபிம்பம் மேற்பரப்பிலுள்ள நீரலைகளோடு தானும் கூத்தாடுவதாகக் தோன்றுமன்ருே? அதுபோல, எங்கும் பரந்த சைதன்யமான பிரம்மம் எப்போதும் நிலையாக இருப்பினும், புத்தியில் தோன்றும் அதன் பொய்யான பிரதிபிம்பமாகிய ஜீவான்மா அசைவது போலவும் தொழிலியற்றுவது போலவும் தோற்றமளிக்கின்றது; உண்மை யாதெனின், புத்தியே அவ்வாறு செய்கின்றது. அது கருமஞ் செய்வதுமில்லை. ஒன்றையும் அனுபவிப்பது மில்லை. அது தன்னைப் பொய்யாகப் புத்தியோடு ஒன்றுபடுத்திக் கொண்டிருத்தலின், அவ்வாறு செய்வதாகத் தோன்றுகிறது. இக்காரணம்பற்றியே ஜீவான்மா விஞ்ஞானமயம் எனப்படுகிறது. ஆயினும் தன்னளவிலே அவ்வான்மா சைதன்யமாய நிலையில் ஈசுவரனேயன்றி வேறில்லை; அதுவே புத்திக்கு உயிரளித்து, சாக்கிரம் சொப்பனம் சுழுத்தியெனும் (நனவு, கனவு, உறக்கம் எனும்) மூன்று நிலைகளிலும் அனைத்திற்கும் நித்திய சாக்ஷியாகப் பிரிந்து நிற்கின்றது.

(தொடரும்)

வேதாந்த சாரம்

நாவலர்

(குடியாத்தம் வேதாந்த பாடசாலையிற் சொற் பொழியப்பட்டது)

வேதாந்தம் என்பது என்னை?

வேதாந்தம் என்பது உலகைத் துறந்து விடுவது என்றும், காவியாடையணிந்து காட்டுக்குப் போய்விடுவது என்றும், எல்லாக் கடமைகளையும் அறவே விட்டுவிடுவது என்றும் பலர் கருதி வருகின்றார்கள். இவ்வாறு கருதி, வேதாந்த நூல்களைக் கற்பது கூடக் கேடு பயக்கும் என்று தம் மக்களை விலக்குகின்றவர் இன்றும் உளர். வேதாந்திகள் உலகை வெறுத்தவர்கள் என்று நினைந்து அவர்களைக் கண்டு அஞ்சுபவர்களும் இருக்கின்றார்கள். வேதாந்தத்தின் உண்மையை உய்த்துணர முடியாமையால் விளையுங் கூத்துக்கள் இவை.

வேதாந்தம் வாழ்க்கைக்கு உணவைப் போல மிக இன்றியமையாதது. அது காவியாடை அணிந்து காட்டுக்குப் போவதன்று. அருளாடையணிந்து அறிவு நகரிலே உலாவுவது. வேதாந்தம் கடமைகளை விட்டுவிடுவதன்று. அது எல்லாக் கடமைகளையும் மேற்கொண்டு அனைத்துயிர்கட்கும் இன்பத்தை விளைக்கும் நெறி. அந்நெறிப்பட்ட நூல்களைக் கற்பது கேடுதருவதன்று, பிறவிப் பயனாகிய பெறலரு நன்மையைத் தருவது. வேதாந்திகள் உலகை வெறுத்தவர்கள் அல்லர்; எல்லாவுலகங்களையுந் தாமாகவே கருதிப் பேரன்பும் பேரருளும் பாராட்டும் பெருந்தகைமை மிக்க அருந்தகையாளர்கள் ஆவர். அவர்கள் அஞ்சத் தக்கவர்கள் அல்லர்; அணைக்கத் தக்கவர்கள்; உலகினோடு இணைக்கத் தக்கவர்கள்; பாராட்டத் தக்கவர்கள்; சீராட்டத் தக்கவர்கள். எல்லாவுலகங்களையும் தம் தூய அறிவாகிய கொற்றக் குடையின் கீழ் ஆளுகின்றவர்கள் வேதாந்திகளே. 'வித்' என்பது அறிவு; வேதம்—அறிவின் பான்மை, அறியப்பட்டது. 'அந்தம்' என்பது முடிபு; எனவே, வேதாந்தம் என்பது அறிவின் முடிவு, அறியப்பட்டதன் முடிவு (முடிந்த கருத்து, முடிந்த அனுபவம்). உண்மை அறிவைப் பயக்குங் கருவிகளாகிய நூல்களை வேதம் என்பர். வேதங்களாற் சொல்லப்பட்ட முடிந்த கருத்தே வேதாந்தம் எனப்படும். வேதம் அழிவற்றது என்பதற்கு அறிவு அழிவில்லாதது என்பதே பொருளாம். எல்லா நூல்களும் அழிவில்லாதவை தாம், அவை உண்மையான அறிவைப் பயக்குமாயின். அன்றியும், அவை ஓதியுணரத்தகும் வேத நூல்களுமாம். இது பற்றி அன்றோ திருக்குறள், திருவாய்மொழி, தேவாரங்களையும் ஆன்றோர் வேதங்கள் என்று கூறினார்கள்?

உலகம் அறிவிலேதான் உண்டாயிற்று; அறிவிலேதான் நிகழ்கின்றது; அறிவைப் பெறவே முயல்கின்றது. அறிவின் எல்லையை அடைவதுபற்றி யார் குறைகூற முடியும்? மடமையையும் மயக்கவறிவையும் கையொருவத் (நீக்கத்) தகாதென்று இயம்ப இயலும்? உலகம் தனது பிறப்புரிமையாகிய அவ்வறிவை அடையும் முயற்சியில் நின்றும் அதனை யார் எவ்வகையில் விலக்க முடியும்? உலகம் அவ்வறிவை இந்நாளிலன்றேல் பிறிது எந்நாளிலேனும் எய்துவது ஒருதலை. விளைந்த காய்கள் பழுத்தாகவேண்டும். வேதாந்த நூல்கள் நமது பக்குவத்தைப் பழுக்கச் செய்கின்றன. அவ்வறிவை அடைவதுவரை மனிதன் பிறத்தல் இறத்தல்களாகிய சுழற்சிகளில் நின்றும் நீங்கமாட்டான்.

வேதாந்தம் மழைபோன்றது. என்றால் தண்ணியது, இனியது என்பதோ எனில், அன்று. அது உலகம் யாவற்றுக்கும் ஒப்பப் பயன்படும் ஓர் மதம். மழை இல்லாவிடில் உலகம் இல்லை; வானோக்கி வாழுமுலகெல்லாம்வேதாந்தமில்லாவிடில் உலகமும் இல்லை; 'அறிவாய்ந்து வாழுமுலகெல்லாம்.' மழை உண்பொருள்களை விளைப்பதுடன் தானும் உணவாகின்றது. வேதாந்தம் பிறமதங்களை வடிவாக்கிப் பண்படுத்துவதுடன், தானும் ஓர் மதமாய் நிலவி ஆன்மாநந்தம் ஆகிய உணவையும் பயக்கின்றது. 'ஆய்வார்க்கிங் காய்வாய வாய்வாகி யாய்வார்க்கிங் காய் வாவ தூஉமறிவு'

மதங்களினுள் வேதாந்தம் என்பது எழுத்துக்களினுள் அகரம் போலும். அகரம் தானேயெழுத்தாகி எல்லா எழுத்துக்களினூடும் ஏற்ற பெற்றி கலந்து ஒளிர்வது போல, வேதாந்தம் தானும் ஓர் மதமாகி எல்லா மதங்களினும் ஏற்ற பெற்றி கலந்து மிளிர்கின்றது. எந்த மதம் அறிவை விரும்பவில்லை? எந்தமதம் அறிவை அடைய விழையவில்லை? எந்தமதம் அறிவின் எல்லையைக் காண அவாவவில்லை? எந்த மதத்தில் வேதாந்தம் இல்லை? பண்பட்ட செந்தமிழின் பயன் போலக் கண்பட்ட விடமெல்லாம் வேதாந்தக் காட்சியே எழில் கொண்டு தழைக்கின்றது.

உற்றாராய்ந்து நோக்கின், ஒவ்வொரு மதமும் வேதாந்த மதமே. இறையில்லை என்று சொல்லும் சார்வாகமும் இன்பத்தை விரும்பத்தான் செய்கின்றது. நிலையற்ற இன்பத்தை விரும்பும் மதம் நிலையுற்ற இன்பத்தையும் விரும்பத்தான் செய்யும் என்பது உண்மை. இன்பத்தை விரும்பும் மதங்கள் எல்லாம், கடவுளை அடையக் கருதும் மதங்கள் எல்லாம் வேதாந்த மதமேயாம். வேதாந்தம் கடவுளை அடைந்து நிலைபுற்ற இன்பத்தை நுகரச் சொல்கின்றது வேறு வியக்கத் தக்க கருத்தொன்றும் வேதாந்தத்தில் இல்லை. வேதாந்தம் ஒரு எளிய மதம். 'இறையிற் கலத்தல்' என இரண்டே வார்த்தைகளில் வேதாந்தம் முழுதும் அடங்கி விடுகின்றது. 'ஒன்றுதல்' என்ற சொல்லிலும் வேதாந்தம் அடங்கி நிற்கும். 'ஒன்றாகக் காண்பதே காட்சி' என்றவர் வேதாந்த மதத்தவரே. இக்கருத்தை விளக்குவதற்காகவே கோடிக்கணக்கான வேதசாகைகளும் வேதாங்கங்களும் ஏனைய நூல்களும் உருவெடுத்துள்ளன. ஒன்றுதல் என்பதைக் குறுக்கிச் சொல்லின், 'ஓம்' என்ற ஒரு சொல்லில் வேதாந்தம் முடிந்துவிடும்.

'ஓம்' என்னும் பிரணவம் முதலும் முடிவும் இல்லாதது. அழியாத தன்மையை உடையதாதலால், அது என்றும் நலமானது, புதியது உலகமுழுதும் பிரணவவடிவம்தான், இறையும் ஓங்கார வடிவமே. "தஸ்ய வாசகப் பிரணவ: என்பது யோகசூத்திரம். ஓங்காரத் தியானத்தில் பழகிவந்தால், அதன் விளைவு வேதாந்தப் பயனைக் காட்சியளிக்கும். மாசற்ற முற்றறிவை அது பயக்கும். மனம் பளிங்கு போல் விளக்கமடையும். மாயையால் மனப்பளிங்கில் தோன்றிய தத்துவங்களாகிய நிறத்தோற்றங்களை ஓங்காரத் தியானம் நீக்கி உண்மையைக் காட்டும்.

அறிவும் மனமும்

அறிவின் எல்லையை - முற்றறிவை - அடைய வேண்டும் என்பதே வேதாந்த மதத்தின் நோக்கம். அறிவு என்பது யாது என்பதை உணர்ந்து கொள்ளாவிடில், அதனை அடைவது எங்ஙனம்? அறிவு அல்லாத உணர்ச்சிகளையும் அறிவு என்று உலகம் வழங்கி வருகின்றது. அறிவு வேறு, உணர்ச்சி வேறு என்பது முதலில் அறியப்படல் வேண்டும். உணர்ச்சிக்கு அறிவுதான் அடிப்படை; இக்கால விஞ்ஞான ஆராய்ச்சியாளர் கூறுவது போல உணர்ச்சி நரம்புகளும் உதிர வோட்டமும் அல்ல. அறிவு காரணமாக உணர்ச்சி உண்டாவதனால், உணர்ச்சியையும் அறிவு என்று நூல்கள் கூறும்.

அறிவு ஒன்றே, அவ்வறிவுதான் உலகை ஆள்வது, உலகாக ஒளிர்வது. அதைத் தவிர வேறு எவ்வறிவும் இல்லை; உண்டென்று தோன்றுமானால், அது அவ்வறிவின் மறை வடிவேயாம். தலைப்பட்ட அவ்வறிவே இறை.

> 'அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
> நிகரிலிறை நிற்கு நிறைந்து'

என்பது திருவருட்பயன்

> "சின்மாதிரம் ஸர்வத: நித்யம் ஸம்பூரணம்
> சுகம் அவ்யயம் ஸாக்ஷாத் பிரம்ம"

என்பது வராகோபநிடதம். அவ்வறிவு எங்கும் இயங்கவல்லது, நித்தியமானது, முழு நிறைவானது, இன்பவடிவமானது, அழிவற்றது.

அவ்வறிவே நமது அந்தராத்மா—நாம். நமது இதய குகையில் வாழ்வது அவ்வறிவேயாம். ஏனெனில், ஓரறிவே உண்டு, அவ்வறிவின்றி வாழ்வில்லை. ஆகவே, ஒவ்வோர் உடம்பகத்தும் அவ்வறிவே அமைந்திருக்க வேண்டும்.

> "அணோ ரணீயான் மஹதோ மஹீயான்
> ஆத்மாஸ்ய ஜந்தோ நிஹிதோ குஹாயாம்"

என்பது நாரதபரிவிராஜக சுருதி.

அந்தரான்மாவாகிய அறிவு உடம்பின் இருக்கை இயக்கம் முதலியவற்றுக்கு உதவ வேண்டுமாயின், அது உடம்பின் எல்லா வுறுப்புக்களினூடும் ஆற்றல் விளங்கி ஒழுக வேண்டும். ஆன்மா அணுவின் அணுவாய் மிக நுட்பமாயிருப்பதனால், பருப்பொருள்களாகிய உறுப்புகளில் நேர் முகமாய்த் தொடர்புறுவது இயற்கையன்றாகையால், அதன் பொருட்டு ஆன்மாவைவிடச் சிறிது நுட்பங் குறைந்ததும் பருப்பொருளுறுப்புக்களிற் செல்ல வல்ல நுட்பமுடையதுமான தோருறுப்பு வேண்டப்படும். அவ்வுறுப்பே மனம் எனப்படுகின்றது. மனம் வாயுவின் பகுதியை மிகுதியாக உடையது. ஏனைய பூதங்களின் நுண்பகுதிகளும் கொண்டிருப்பதனால், மனம் ஐம்பூத வடிவம்—பாஞ்சபௌதிகம். அந்தரான்மாவாகிய அறிவு மனத்தோடு தொடர்புற்று நிற்குங்கால், அதனைச் சீவான்மா — உயிர் என்கின்றோம். நமது நனவு நிலை இந்நிலையேயாம். மனத்தின் கண் புகுந்த அறிவு மனத்தின் வழிப் பொறிகட்குச் சென்று புலனுணர்ச்சிக்கு ஏதுவாகின்

றது. மனத்தின்கண் வாய்ந்த அறிவு மனவறிவு அல்லது மன உணர்ச்சியாம். இம்மனவறிவே கல்வி, கலை ஆராய்ச்சி முதலிய பல வேறு வடிவங்களை அடைகின்றன.

மனம் சடமாகையால், தானே அறியும் வல்லமை இல்லாதது. மனத்தோடு தொடர்புற்ற அறிவுந் தன் உண்மை வடிவை மறந்து, மனமாகிய எல்லைக்குள் உலாவுகின்றது. அவ்வெல்லையைக் கடந்து வெளியே விளங்குவது அந்தரான்மா.

'ஏகோ தேவஸ் ஸர்வ பூதேஷு கூட:
ஸர்வ வ்யாபீ ஸர்வ பூதாந்தராத்மா!'

என்பது சுவேதாசுவதரம். அந்தரான்மாவாகிய அறிவு விகாரம் அடைவதில்லை. அவ்வறிவின் ஒளியே—சைதன்யமே—மனத்தில் நிழலிடுவது. அந்தராத்மா இப்பொழுதுந் தன்னை அறிந்து கொண்டுதான் இருக்கின்றது. அதற்கு மயக்கமும் இல்லை, பாசமும் இல்லை. அதனது நிலை முத்தி நிலையேயாம். அதன் சைதன்னியத்தைச் சைதன்னியமென்றும் மனத்தை மனம் என்றும் உணராமல் அவற்றை ஒன்றாகவுணர்வதே மயக்கமாம்.

மனத்தின் கண் புகுந்த அறிவு—சைதன்னியம்—மனவெல்லைக்கு அகத்தே இருந்து கொண்டு அந்தரான்மாவை அறிய இயலாது. அதாவது, மனவறிவு அந்தரான்மாவை அறிய இயலாது என்பது. பொருந்துமாறு (ஊகை) ஆராய்ச்சி முதலியவை மனவறிவின் விளைவுகளாகையால், அவற்றால் ஆன்மாவையும் இறைவனையும் எக்காலத்தும் அறிய இயலாது என்பது) ஆராய்ந்து உணரத் தக்கதேயன்றோ?

'அனூஹ்ய ஏஷ பரமாத்மா' (ஊகத்தால் அறியமுடியாதது இப்பரமாத்மா) என்பது மைத்திராயண்ணியுபநிடதம். எனவே, விஞ்ஞான கலைத் தேர்ச்சி வாயிலாகவோ இயற்கையை முற்றுந் துருவுதல் வாயிலாகவோ இறைவனை அறிய அடைய என்ஞான்றும் இயலாது. ஆன்ம சைதன்னியத்துடன் இறையின் மாயையது நிழலாகிய அவித்தையையும் கொண்டு பஞ்சபூத நுண்பொருளாக்கமே முழுமனம் என இப்பொழுது அறிவது எளிதாகும். இவற்றுள் அவித்தையொடு கலந்த சைதன்னியம் மனவறிவு, அவித்தை மனம், பஞ்சபூதம் மன ஆக்கப் பொருள் எனப் பகுத்துணர வேண்டும். அவித்தையும் பூதங்களும் தாமே உணரும் வல்லமை அற்றவையாகையால், 'என் மனம் அறியும்' என்றாற் போன்ற வழக்குகளில் சைதன்னியத்தையும் உள்ளடக்கியே கூறுகின்றோம். நினைவு, உறுதி, ஆராய்ச்சி, தன்னுணர்ச்சி என்பவை சைதன்னியத்தின் ஆற்றலாலேயே நிகழ்கின்றன. நினைவு முதலியவற்றில் சைதன்னியம் எதன்கண் முனையுமோ அதற்கேற்ப அம்முப்பொருட் கூட்டமும் பெயர்கள் பெறும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவே அப்பெயர்களாம். புத்தி முதலியவற்றை மனத்தின் வெவ்வேறு நிலைகள் என்பதும் பொருந்தும்.

இம்முப்பொருட் கூட்டத்தைப் பற்றிய உணர்ச்சியை நீக்கினால் மட்டுமே அவ்வெல்லையைக் கடந்த இறைவனை எய்த முடியுமாகையால், மனம் ஒன்றே வீடுபேற்றுக்குச் சாதக பாதகங்களாக இருக்க முடியும். மனத்தை வெற்றி கொண்டால் பெறுவதற்கு அரிய பொருள் யாதும் இல்லை.

(தொடரும்

தூய கதைகள்

தயை

தோப்ரீவேயின் படிப்பு முடிந்ததும் அவன் பிறந்தநாள் வந்தது. அதை ஒட்டி ஏராளமான பரிசுப் பொருள்கள் அவனுக்குக் கிடைத்தன. அவனுடைய தந்தை மைந்தனை அன்பொழுக அருகில் அழைத்துக் 'மைந்தாய்! நீ இவ்வளவு காலமாகத் தணிவும் உழைப்பும் அறிவும் பெற்ற மாணவனாக இருந்தாய். இன்று படிப்பை முடித்துவிட்டாய் இனி நீ உலக வாழ்க்கையில் ஈடுபட்டுச் செல்வத்தைத் திரட்டவேண்டும். உன்னிடம் எனக்கு முழு நம்பிக்கையும் இருக்கிறது. இன்று கிடைத்த பரிசுத் தொகையை எற்றுக்கொள். வெளியே சென்று பூத்துப் பழுத்து மகிழ்ச்சி பெறு' என்று கூறினார்.

தோப்ரீவே பெற்றோரை வணங்கிவிட்டுத் தன் அழகிய கப்பலுக்குச் சென்றான்.

அவனுடைய கப்பல் கடல் நீரைக் கிழித்துக்கொண்டு விரைந்தது. பாதையில் துருக்கி நாட்டுக் கப்பலொன்று தென்பட்டது. முறையே அது அருகில் வந்து சேர்ந்தது. அதில் பல மக்களுடைய அழுகையொலி

தோன்றி தோப்ரீவேயைத் திகைக்கச் செய்தது.

'உன் கப்பலில் ஏன் இந்தக் கூக்குரல்? ஏன் இவர்கள் அழவேண்டும்? பசியால் வாடுகின்றனரா? நோயினல் துன்புறுகின்றனரா?' என அக்கப்பற்றலைவனை அழைத்து தோப்ரீவே வினவினன்.

'அதெல்லாமில்லை. இவர்கள் அடிமைகள். நான் இவர்களை வேறுநாடுகளில் விற்றுப் பொருள் தேடிவருகிறேன். இவர்கள் என்னிடம் கைதிகளாயிருப்பதனல் கூக்குரலிடுகின்றனர்' என துருக்கிக் கப்பல் தலைவன் விடையளித்தான்.

'சற்றுப் பொறு. நாம் இருவரும் கப்பல்களை மாற்றிக்கொள்வதில் உனக்கு விருப்பமுண்டா?' என தொப்ரீவே வினவினன்.

அயல் கப்பலின் தலைவனும் தொப்ரீவேயின் கப்பலில் விலையுயர்ந்த பல பொருள்களிருப்பதை ஆராய்ந்து நோக்கி அந்த ஏற்பாட்டிற்கு இசைந்தான்.

கப்பல்கள் மாற்றிக் கொள்ளப்பட்டன. தொப்ரீவே அடிமைக் கப்பலில் ஏறி எல்லாக் கைதிகளிடமும் அவர்களுடைய நாடு, ஊர், வீடு முதலியவற்றைக் கேட்டு அறிந்தான். அவரவரை அவரவரில்லத்திற் கொண்டு போய்ச் சேர்த்து, அடிமைத் தன்மையினின்றும் விடுதலையை அளித்தான். அவர்கள் மனமார வாழ்த்தினர்.

ஓர் கிழவியும் ஒரு அழகிய வாலிப மங்கையும் கப்பலில் இருந்தனர். கிழவிக்குத் தன் வீடு, வாயில், ஊர் முதலியவற்றைப்பற்றித் தெரிவிக்க முடியவில்லை. அவளுடைய வீடு தொலைவில் இருப்பதாகத் தெரிவித்துவிட்டாள். இளமங்கை மட்டும் 'நான் ரஷ்ய சக்கரவர்த்தியின் புதல்வி, இக்கிழவி என் பணிப்பெண், இனி என் வீட்டிற்குச் சென்று பெற்ரோருடன் கலந்து வாழ்வது இயலாத செயல். வேறு நாட்டில் எங்காவது உழைத்து வாழ்க்கையை நடத்த எண்ணியுள்ளேன்' என்று கூறினள்.

'அழகிய பெண்ணே! என்னை மணக்க விருப்பமுண்டா? சொல். நிம்மதியுடன் நீங்கள் வாழலாம்' என தோப்ரீவே கேட்கவும் அவ்விளமங்கை தலைகுனிந்தவண்ணம் நின்று தன் எண்ணத்தை வெளியிட்டாள்.

தோப்ரீவேயின் உயர்குணங்கள் அவள் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டன.

கப்பல், துறைமுகத்திற்குத் திரும்பிய செய்தியைக்கேட்ட தந்தை மைந்தனை வரவேற்க வந்துசோர்ந்தார்.

'தந்தையே! தம் செல்வத்தை மிகவும் உயர்ந்த முறையில் செலவு செய்தேன். துன்பங்கட்காளாக விருந்த பல அடிமைகட்கு விடுதலையளித்தேன். அழகிய மங்கை ஒருத்தியைத் தம் மருமகளாக்கினேன். நூற்றுக்கணக்கான கப்பல்களைக் கொடுத்தாலும் இம்மங்கை கிட்டுவாளா?' என தோப்ரீவே தந்தையிடம் தன் சாதனையைத் தெரிவித்தான்.

இதைக் கேட்டதும் தந்தையின் முகம் சிவந்தது. தன் மைந்தனைத் திட்டினர்.

சில நாட்கள் கழிந்தன. 'மைந்தன் நல்லறிவு பெற்றிருப்பான்' என்று நம்பிய தந்தை மற்ருெரு கப்பலில் பல பொருள்களை ஏற்றி மறுமுறை அயல்நாடு சென்று செல்வம் திரட்டிவர ஏவினர்.

கப்பல் மற்ருெரு துறைமுகத்திற்குச்சென்றது. அரசாங்க ஊழியர்களால் கைதுசெய்யப்பட்ட சில ஆடவர்கள் அழுதுகொண்டிருந்தனர். அவர்களுடைய மனைவிகளும் மக்களும் இன்னது செய்வதென அறியாது பெருங் கூக்குரலிட்டனர். அக்காட்சி காணச் சகியாததாயிருந்தது. சிப்பாய்த் தலைவனிடம் காரணத்தை வினவினன் தோப்ரீவே.

சுங்கவரி கொடுக்காது துறைமுகத்தில் தங்கியதற்காக அவர்கள் கைதுசெய்யப்பட்டுச் சிறைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனரென விடை கிடைத்தது.

தன் கப்பலில் இருந்த ஏனைய பொருள்களையும் விற்று அவர்களை விடுவித்தான் தோப்ரீவே.

மறுமுறையும் வெறுங்கையுடன் திரும்பிய தோப்ரீவே மனைவியுடனும், பணி மங்கையுடனும் வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டான். ஆனல் அண்டை வீட்டாருடைய பிடிவாதத்தினல் தந்தை சினமிழந்து தோப்ரீவேயை வீட்டிற்குள் வரவேற்ருர்.

சிலநாட்கள் கழிந்தபின் தந்தை மைந்தனிடம், 'குழந்தாய்! இப்பொழுது உனக்கு

மணமுமாகிவிட்டது. இனி நீ பொறுப்பின்றி நடக்கக் கூடாது. மறுமுறை ஒரு கப்பல் பொருள்களை யளிக்கிறேன். சென்று செல்வம் தேடிக்கொள். இந்தத் தடவையும் நீ ஏமாந்தால் பட்டினியால் வருந்திச் சாகத் தான் வேண்டும், நினைவிற் கொள்' என்று சொல்லியனுப்பினர்.

கப்பல் எங்கெல்லாமோ சுற்றிக் கடைசியில் ஒரு துறைமுகத்திற்குச் சென்றது. அங்கு தோப்ரீவே இறங்கினன். எதிரில் ஓர் உயர்ந்த நிலையில் உள்ள கனவானைக் கண்டான். அவரும் இந்த தோப்ரீவேயின் கையில் அணிந்திருந்த உயர்ந்த மோதிரத்தைக் கண்டு ‘இது என் மகளுடைய மோதிரம். இது உன் கைக்கு எவ்வாறு வந்தது?’ என்று வினவினர். தோப்ரீவே முழுச் செய்தியையும் சொன்னன். அதைக்கேட்ட ரஷ்ய சக்கிரவர்த்தியான ஜார்மன்னன் காணமற் போன தன் புதல்வியின் கணவனே தோப்ரீவே என்பதையும், அவளிடமிருந்து மோதிரத்தைப் பெற்றிருக்கின்றான் என்பதையும் அறிந்துகொண்டான்.

மிகவும் மகிழ்ந்து தன் அரசாங்கத்தில் பாதியை மருமகனுக்குக் கொடுப்பதாக வாக்கு அளித்தான். மனைவியையும் பெற்றோரையும் அழைத்துவருவதாகக் கூறி விடை பெற்றுக் கிளம்பிய தோப்ரீவேயுடன் அந்த நாட்டு அமைச்சனும் அரசனுடைய ஏவுதலினல் பின் தொடர்ந்தான்.

இம்முறை தோப்ரீவே தந்தையின் புகழ்ச்சியைப் பெற்றான், மனையோருடனும் கப்பல் புறப்பட்டது.

அமைச்சன் தீயோன். பிறர் வாழ்வதைக் காணச் சகியாதவன். முன் பின் தெரியாத தோப்ரீவே பாதி அரசாங்கத்தைப் பெறுவதை அவன் எவ்விதம் சகிப்பான்? பாதையில் தோப்ரீவேயை ஒழித்துவிட உறுதி கொண்டான். தக்க சமயம் பார்த்துக் கப்பல் வேகமாகச் சென்று கொண்டிருக்கையில் தனிமையில் தோப்ரீவேயைக் கடலில் தள்ளிவிட்டான்.

கப்பல் தொலைவில் சென்று மறைந்தது. எவரும் தோப்ரீவேயைக் கவனிக்கவில்லை. கைகளால் முடிந்தவரை நீந்தினன். நற்காலத்தின் உதவியினல் ஓர் பெரிய அலை ஒரு பாறையில் அவனை ஒதுக்கிவிட்டது. அங்கு எவ்விதமான உணவும் கிடைக்காமல் மூன்றுநாட்கள் தோப்ரீவே வாடினன். நான்காம் நாள் ஓர் செம்படவன் அங்கு வந்தான். தோப்ரீவே தன் செய்தியைச் சொன்னன். ‘உனக்குக் கிடைப்பதில் பாதியை எனக்குக் கொடுப்பதாயிருந்தால் உன்னை ரஷ்யத் தலைநகரிற்கு அழைத்துச் செல்வேன்’ என்று செம்படவன் சொன்னன். தோப்ரீவே ஒப்புக்கொண்டான்.

பிறகு துறைமுகத்திற்குச் சென்ற தோப்ரீவே மன்னனைக் கண்டான். மன்னனுடைய மகிழ்விற்கு எல்லையே இல்லை. ‘அமைச்சனை மன்னிக்கவேண்டும்’ என்று மன்றாடி வேண்டிய மருமகனுடைய உயர் குணங்களால் மெய்மறந்த மன்னன் முழு அரசாங்கத்தையும் தோப்ரீவேக்கு அளித்துவிட்டான். தான் தனிமையில் கடவுள் வழிபாட்டில் மிகுதியான நாட்களைச் செலவிட எண்ணினன்.

தோப்ரீவேக்கு முடி சூட்ட ஏற்பாடுகள் நடைபெற்றன. அந்த நேரத்தில் ஓர் செம்படவன் அங்கு வந்தான். ‘உன் அரசாங்கத்தில் பாதி எனக்குச் சேர வேண்டும். உன் உறுதிமொழி நினைவில் இருக்கிறதா?’ என்று வினவினன்.

தோப்ரீவே கண்களை அசைத்தால் போதும். பணியாளர் அவனை வெளியே ஓட்டியிருப்பர். ஆனல் தோப்ரீவே அவ்வாறு செய்யவில்லை. செம்படவனை ஆவலுடன் வரவேற்றான். தன் அரசாங்கத்தையும் பொக்கிஷத்தையும் இரண்டு பிரிவுகளாகப் பிரித்துச் செம்படவனுக்கு ஒரு பிரிவைக் கொடுத்தான்.

செம்படவன் ரோமங்கள் பொன்னிறமாயின. ‘எவன் உள்ளத்தில் தயை நிலவுகிறதோ, அவனுக்கு என்றும் கடவுள் உதவுவார்’ என்று சொல்லிவிட்டு மறைந்தான்.

கடவுளின் அவ்வருள் மொழியைக் குறிக்கோளாக வைத்து ஆட்சிபுரிந்த தோப்ரீவேயின் நாட்களில் நாடு செழித்திருந்தது. மக்களும் இன்பமுற்றிருந்தனர்.

செய்தி

முப்பெருங் கோயில்கள்

சென்ற சித்திரை 28-ம் தேதியாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் ஜயந்தி நன்னாளிலே சுதந்திரம் பெற்றுள்ள நம் பாரதமா நாடு அதற்குச் சின்னமாகவும் அதன் விளைவாகவும் ஏற்பட்ட முப்பெருங் கோயில்கள் சம்பந்தமான பயன் பொதிந்த நிகழ்ச்சிகளைக் காணும் பேறு பெற்றது. பிரபாஸ பட்டணத்திலே சோமநாதரது கோயிலின் பிரதிஷ்டையும், அதற்கருகே தேகோத்ஸர்க்க தலத்திலே கண்ணபிரான் தமது திருமேனியை நீத்தருளியதற்கு நினைவுச் சின்னமாக அமையப் போகும் சிங்கார மண்டபத்திற்கு அஸ்திவாரக்கல் அமைப்பும், ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரித்த கமார்ப்புகூரில் பிறந்த இடத்திலே எழுப்பப் பெற்றுள்ள ஒரு கோயிலின் பிரதிஷ்டையும் இம்மூன்றும் அன்பர்களின் உள்ளக் கமலங்களை அலர்த்தலாயின. சோமநாதரது கோயில் இந்துக்கட்குக் கோயில் வழிபாட்டிலுள்ள ஊற்றத்திற்கும், திருவுருவை இறைவனது உயிருள்ள அருள் திருமேனியாகக் கருதும் கொள்கைக்கும் ஓர் அழிவற்ற சான்றாக இனி விளங்கும். தேகோத்சர்க்க மண்டபம் இந்துமதத்தின் உலவாப் பெருமைக்கும், பிரம்ம வித்தையை உருவாக்கிய யோகேசுரனது திருவாக்கிற்கும், நமது அறநாட்டிற்கு அபயமளிக்கும் அருள்வாக்கிற்கும் ஓர் எழிற் சின்னமாக விளங்கும்; கமார்ப்புகூர் கோயில், உறங்கிய பாரதம் விழித்தெழுந்து புத்துயிர் பெற்றுப் பொலிதற்கு அறிகுறியாக எழுந்த ஞானக் கதிரோனான ஸ்ரீராமகிருஷ்ணப் பெருமானது பெருமைக்கு நினைவுச் சின்னமாகப் பல்லாண்டு காலம் வாழும்.

இப்போது கட்டப்பட்டுள்ள சோமநாதர் கோயில் ஸௌராஷ்டிரத்திலே பிரபாஸ பட்டணத்திலே கடற்கரையோரமாக உள்ளது. 1947-ம் நவம்பரில் காலஞ்சென்ற ஸ்ரீமான் சர்தார் வல்லபாய் பட்டேல் என்பவர் அவ்வூர்க்குச் சென்ற போது இப்பழம் பெருங் கோயிலைப் புதுப்பிக்கும் பணியில் இந்திய சர்க்கார் ஈடுபடல் வேண்டும் எனும் கருத்து உதிக்கலாயிற்று. ஸௌராஷ்டிர ராஜப் பிரமுகர் நவ நகர் ஜாம் சாஹிப் ஓர் இலஷம் ரூபாய் நன்கொடை அளித்தார். முன் ஆறு முறை கட்டப்பட்டுப் பாழான இக்கோயில் ஏழாவது முறை இப்போது கட்டப்படுகிறது. கி.பி. 1025-ல் மகம்மது கஸினியின் படையெடுப்பில் கோயில் கொள்ளையிடப்பட்டதோடு 50,000 இந்துக்களும் இறந்தனர் என்பர் சரித நூலார். அதன் பின்னும் கோயில் எட்டுமுறை அன்னிய மதத்தினரால் பாழாக்கப்பட்டதாக, அத்தனை முறையும் இந்து மன்னர்கள் புதுப்பித்தும் புதிதாகக் கட்டியும் வந்தனர். அன்னிய மதத்தினர்க்கு இந்து மதக் கோயில்களை இடிப்பதிலுள்ள விடா முயற்சியினும் மிக்க விடாமுயற்சி அவற்றைக் காப்பதில் நமக்கு உள்ளது என்பதற்குச் சோமநாதர் கோயிலே சாலும் கரியாகும் (பொருத்தமான சாக்ஷியாகும்). மகம்மது கஸினி படையெடுத்த காலத்து ஆயிரக்கணக்கான நமது மக்கள் சோமநாதரை வாழுந் தெய்வமாக நம்பி அவரது திருவடிகளிற் சரண்புகுந்தனர், அவரது திருவுள்ளப்படியாகுக என்று துணிந்தனர், உயிரும் துறந்தனர். அவர்கள் தம் நெஞ்சு இரத்தத்தை விட்டு வளர்த்த பக்திப் பயிர் இன்றும் அழியாது ஓங்கிவருகிறது என்பதற்கு, அக்கோயில் மீண்டெழுந்த அதிசயமே போதிய சான்றாம்.

பிரதிஷ்டை பண்ணப்பட்ட கருங்கற் சிவலிங்கத் திருவுருவத்தின் பின் வெண்கல்லிற் செதுக்கப்பட்ட புன்முறுவல் பூத்த பார்வதி அம்மையின் வடிவம் அன்பர்களின் அகக் கண்ணைக்கவரும் நிலையில் திகழ்கிறது. சுமார் 60—65 இலக்ஷ ரூபாய்ச் செலவில் எட்டுப் பத்து ஆண்டுகளிற் கோயிற் கட்டிடம் பூர்த்தியாகும் போது, 250 அடி நீளமும் 118 அடி அகலமும் உள்ள அதில், கர்ப்பக்கிருகம் 'கூடமண்டபம்' நாட்டியக்கிருகம் எனும் மூன்று பகுதிகளும், கர்ப்பக் கிருகத்திற்கு மேலே ஒன்பது அடுக்குகள் கொண்ட 150 அடி உயரக் கோபுரமும் அதன்மீது ஒன்பது அடி உயர தங்கஸ்தூபியும் அடியார்களின் புறக் கண்களைக் கவரும் நிலையில் அமையும். 'நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!'

சோமநாதர் கோயிற்கு முக்கால் மைல் தொலையிலுள்ள தேகோத்ஸர்க்க (திருமேனியை நீத்த) தலத்தில் இப்போது அஸ்திவாரம் போடப் பெற்றுள்ள இடத்திற்கு மேலேயுள்ள திருவரசிலே (மோக்ஷத் திருவரசு என்னும் பெயர் பெறும் இது) கண்ணபிரான் தமது அவதார உடலை உகுத்தனர் என்ப. இங்கே எழும் நினைவுச் சின்னமாகிய கட்டிடம் கீதையின் 18 அத்யாயங்களை நினைவூட்டும் 18 தூண்கள் கொண்ட ஒரு மண்டபமாகும்; கீதையின் சுலோகங்கள் அத்தூண்களில் வரையப்படும். கண்ணன் கழலிணை நண்ணினர் நற்றுணை! வாழிய கீதை! வாழ்க நங் கண்ணன்!

ஸ்ரீராமகிருஷ்ணரது அவதாரத் தலமாகிய கமார்ப்புகூரிலே எழுந்த கோயிலில் அவரது திருவுருவம் அழகிய சலவைக் கல்லால் அமைக்கப்பட்டு, ஸ்ரீமத்சுவாமி சங்கரானந்தஜி மஹராஜ் அவர்களால் மே மாதம் 11-ம் தேதி பிரதிஷ்டை செய்யப்பட்டது. கோயிலுக்கு மேற்குப் பக்கத்திலே ஸ்ரீராமகிருஷ்ணரது குலதெய்வமான ஸ்ரீ ரகுவீரரது திருக்கோயிலும் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரதிஷ்டை விழாவிற்கு 200 துறவிகளும் ஆண்களும் பெண்களுமாக 800 அடியார்களும வந்து, கண்ணுக்கும் மனதிற்கும் இன்பம் பெற்றனர். உள்ளூர் வாசிகளும் மிக்க ஊக்கங் காட்டினர்; சுமார் 20,000 மக்கள் கூடியிருந்தனர்; 7,500 பேர் 11-ம் தேதி பகலில் பிரசாதம் அருந்தினர். பிரதிஷ்டைக்கு முந்திய நாளும் பிந்திய நாளும் பிரதிஷ்டை நாளன்றும், பக்திரசமான பாடல்களும் பிரசங்கங்களும் ஊர்வலமும் பூஜையும் ஹோமமும் மத நாடகங்களும அன்பர்களின் மனங்களில் பக்தியைக் கிளரச் செய்தன. அதைக் காணும் பேறு பெற்றார்க்கு அது மறக்கவொண்ணாத ஆனந்த நிகழ்ச்சியாகும். விழாவின் இனிய பகுதிகள் அசையும் படச் சுருளிற் படம் பிடிக்கப்பட்டுள்ளன. அவதார வரிஷ்டரான ஸ்ரீராமகிருஷ்ணர் ஊரும் நாடும் உலகமும் உய்யுமாறு அகவுலகிலே மலையனைய ஒரு ஞானப் பேரலையை எழுப்பிப் பரப்பியுள்ளார்; அப்பேரருள்—திறத்திற்கு இக் கோயில் புறவுலகிலேநிறுவிய ஞாபகச் சின்னமாம். அப்பெருமானது அருளாட்சி ஞாலமெங்கும் நிலவுவதாக! அம் மாஞானப் பேரலைக்குப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு என்று கூறுதுமே.

மதிப்புரை

1. The Kundalini Shakti.

2. The Ideal Life and Moksha.

ஆசிரியர்: சுவாமி நாராயணானந்தர். விலை. (1) ரூ. 4 (2) ரூ. 3—8—0 பக்கம்: (1) 155 (2) 208. கிடைக்குமிடம்: என். கே. பிரசாத் ஜண்ட் கம்பெனி, புத்தகம் பிரசுரிப்போர், ரிஷிகேஷ் (U.P.) இரண்டும் (ஆங்கிலப் புத்தகங்கள்)

1. இவ் ஆங்கில நூல் பெரும்பாலும் ஆர்தர் ஆவலான் என்பவருடைய தந்திர சாஸ்திர நூல்களிலும், சுவாமி விவேகானந்தரது 'இராஜயோகம்' எனும் நூலிலும் குண்டலினியைப் பற்றிக் கூறப்பட்டுள்ள முக்கிய பல விஷயங்களையும் கருத்துக்களையும் தொகுத்து, மனம், சித்தம், ஸஹஸ்ராரம், குண்டலினி ஆதாரங்கள் சம்பந்தமான (ஆசிரியரின்) சொந்த விவரணங்களையும் ஊகத்தால் சேர்த்து விரிவாக எழுதப்பட்டுள்ள ஒரு நூல். இந்நூற் கொள்கைகளின் உண்மையை ஆராய்ந்து தெளிய யோகசாதனமும் அனுபூதியுமே வேண்டப்படுவன. பிராணயாமம், பந்தம், முத்திரை முதலியவற்றைப் பழக விரும்புவார் எவ்வளவு நூலறிவைப் பெற்றவராயினும், யோகங் கைவந்த ஒரு குருவின் முன்னமர்ந்து பழகினலன்றிப் பேராபத்துக்குத் தம்மை உள்ளாக்கிக்கொள்ளுவார் என்னும் எச்சரிக்கை வற்புறுத்தத் தக்கது. நூலிற் பல விடங்களிற் கூறியது கூறலும், வழக்கிற்கு இடமாகும் கொள்கைகளும் காணப்படுகின்றன; எனினும் ஆசிரியரது துணிபும் ஊகமும் மெச்சத்தக்கனவாகும்.

2. இந்த நூல் ஆங்கிலத்தில் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களின் இயல்புகளையும் கருமயோகம் பக்தியோகம், இராஜயோகம், ஞானயோகம் எனும் நான்குவகை முத்தி நெறிகளையும் பற்றித் தெளிவாக எடுத்துரைக்கின்றது. ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களையும் ஸ்ரீசுவாமி விவேகானந்தரின் நான்கு யோகங்களைப் பற்றிய நூல்களையும் தழுவி, அவற்றின் சாரங்களையெல்லாம் சுருங்கவும் விளங்கவும் கூறும் நூல். ஞான இச்சையுடையார்க்குப் பெரிதும் பயன்படும் நூல் இது.